உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௰] பிரஜோத்பத்தி௵ மார்கழிமீ [பகுதி-௨.
Vol. XXX. December 1931–January–1932. No. 2.

## மறதி.

[P. N. அப்புஸ்வாமி ஐயர், (B.A., B.L.) எழுதியது.]

ஆரோக்கியமான சுகநிலையில் நாம் இருந்துவரும்பொழுது எத்தனைசங்கதிகளை நாம் மறந்துவிடுகிறோம்! நாம் சிநேகிதர்களுடன் பேசும்பொழுது 'மறந்துவிட்டேன்' 'கவனிக்கவில்லை' 'மன்னிக்கவேண்டும்' என்றெல்லாம் எத்தனைதரம் சொல்லநேரிடுகிறது. ஆனால் ஒன்று; இவ்வாறு நமது உடல் ஆரோக்கியமாயிருக்கும்பொழுது நாம் மறந்துவிடுவன எல்லாம் நமக்குப் பிடிக்காத விஷயங்களாகவே இருக்கின்றன. நாம் வாங்கிய சிறு கடன்கள் நினைவில் நிற்பதில்லை. நமக்குப் போகப்பிரியமில்லாத சபைகளையும் விசேஷங்களையும் முழுதும் மறந்துவிடுகிறோம். ஆனால் நல்ல பாட்டுக்கச்சேரிகளை மறப்பதில்லை, விருந்துச்சாப்பாடுகளை மறப்பதில்லை. இதன்பொருட்டு நாம் ஒருவிதத்திலும் முயன்று பாடுபடுவதில்லை. முந்தியவை எப்படித் தாமாகவே நமது ஞாபகத்தைவிட்டு விலகிவிடுகின்றனவோ, அதேபடியாகப் பிந்தியவை ஞாபகத்தில் விடாது ஒட்டிக்கொள்ளுகின்றன. ஏன்? இன்பம் தராதவைகளை மறப்பதும், இன்பம் தரத்தக்கவைகளை ஞாபகத்தில் வைப்பதும் இயல்பாகவே இருந்துவருகிறது. இயற்கைத் தாய் நமக்குச் செய்யும் உதவிகளுள் இதுவும் ஒன்று.

ஆரோக்கியநிலையிலிருப்பவனுக்கு இயற்கையன்னை காட்டும் பக்ஷபாதத்துக்கு அளவேயில்லை. அவனுக்கு நல்ல பசியைக் கொடுக்கிறாள்; மிகவும் ருசியான உணவைக் கொடுக்கிறாள்; — பசியன்றோ உணவை இனிக்கச்செய்வது; — மிகுந்த தேக புஷ்டியைக் கொடுக்கிறாள்; அழகிய உடலையும், ஒளிபொருந்திய பார்வையையும், காம்பீரியம்

நிரம்பிய தோற்றத்தையும் கொடுக்கிறாள்; நல்ல குழந்தைகளைக் கொடுக்கிறாள்; சுகமான வாழ்க்கையையும், அயர்ந்த தூக்கத்தையும், சிரித்த முகத்தையும், அதற்கேற்ற மனத்தையும் கொடுக்கிறாள். உலகெல்லாம் புன்சிரிப்புக்கொண்டதாகவே தோற்றும் அவனுக்குத் தன் அழகுமுழுவதையும் அவள் காட்டுகிறாள். தன் அன்பு முழுவதையும் அவன் மீது வைக்கிறாள். ஆகவே அவன் நல்லதல்லாதனவற்றைத் தானாகவே மறந்து, இன்பம் தருவனவற்றைத் தானாகவே நினைந்து இன்புற்று வாழ்கிறான். இவ் வுலகிற்குரிய சிறு கவலைகள் அவனைச் சிறிதும் அணுகுவதில்லை. ஆடும் மயிலும், பாடும் குயிலும், அசையும் மாமும், வீசும் காற்றும், பூக்கும் செடியும், தாக்கும் கடலும், அழகிய நிலவும், மாந்தரின் வனப்பும் களிப்பும் பாட்டும் கூத்தும், குழந்தைகளின் ஆரவார மழலைச்சொற்களும் அவன்மனதைக் கவர்கின்றன. அவையனைத்திலும் அவன் ஈடுபட்டு மகிழ்கின்றான். கவலைக்கிடமானவையும், வருத்தம் தாத்தக்க விஷயங்களும் அவன்கண்ணிற் படுவதில்லை, காதிற் கேட்பதில்லை. தோற்றுவதெல்லாம் அவனுக்கு ஆநந்தமயமாகவேதோற்றுகிறது.

ஆனால், இவ்வாறுள்ள ஒருவன் நோயுற்றபொழுது இவையெல்லாம் மாறிவிடுகின்றன. பெருந்தன்மையான பொருநோக்குடன் அவன் உலகத்தைப் பார்க்கமுடியாதுபோகிறது. அதிலுள்ள சின்னஞ்சிறு விஷயங்கள் பெரும்பெரும்விஷயங்களாகத் தோன்றுகின்றன. ஆரோக்கியநிலையிலிருக்கும் ஒருவன் சட்டைசெய்யாது சிரிப்புடன் ஒதுக்கும் ஒவ்வொருவிஷயமும், நோய்வாய்ப்பட்டவனுக்கு எண்ணி எண்ணி வருந்தவேண்டிய பெரியவிஷயமாகத் தோன்றத்தொடங்குகிறது. மறக்கவேண்டிய அற்ப விஷயங்களெல்லாம் உள்ளே ஆழத் தைத்த சல்லியபாணம்போல் நினைவைவிட்டு வெளியேபோகாமல் பதிந்துகிடந்து துன்புறுத்தத்தொடங்குகின்றன. போனது போகட்டும் என்று ஒன்றையும் அவன் மனது விடுவதில்லை. மேல் நடக்கவேண்டிய அரிய முயற்சிகளையும் அவற்றின் இனிய பயன்களையும் அது சிறிதும் நினைப்பதில்லை. கடந்துபோன, பழைய—மறக்கவேண்டிய—குறைகளையும் குற்றங்களையும் கஷ்டநஷ்டங்களையும் நினைந்து நினைந்து உருகி ஏங்கித் துடிதுடித்துக்கொண்டேயிருக்கிறது நோயுற்ற அவன்மனம்.

சுறுசுறுப்பற்ற, களைத்துப்போன மனதின் குணங்களுள் இதுவும் ஒன்று. இத்தகைய மனத்தையுடைய மனிதன் ஒருவனுக்கு ஏதாவது

சிறு நஷ்டம் ஏற்பட்டால் போதும். உடனே அவன் செலவைச்சுருக்கும் முறைகள் அனைத்தையும் ஆராயத்தொடங்கிவிடுகிறான். சிறிது சேதம் ஏற்பட்டவுடன், வேறு எவ்விதமாய் வருமானத்தைத் தேடலாம், சுறுசுறுப்பாய் எவ்வாறு உழைக்கலாம், புதிய அனுகூலமுறைகள் யாவை, என்று தேடத்தொடங்காது, செலவை எவ்வாறு குறைக்கலாம் என்று எவன் ஒருவன் எண்ணுகிறானோ, அவன் ஆரோக்கிய நிலையில் இல்லை என்பது நிச்சயம். அவனுக்கு ஞாபகத்தின் தொந்தரை மிகுதியாயிருக்கிறது. முனகாலத்திலே ஆராய்ந்து பயனற்றவையென அவன் கண்டுகொண்ட முயற்சிகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் அவன்முன்பு தோன்றி அவனுடைய ஊக்கத்தைக் கெடுக்கின்றன. அவன் துணியிலும், தபால்தலையிலும் இவை போன்ற சிறுவிஷயங்களிலும் மூடத்தனமாகச் செலவுகளைச் சுருக்க நாடுகிறான். மேன்மேலும் சுறுசுறுப்புடன் புதுப்புதுத் துறைகளில் ஊக்கத்துடனும் புத்தியுடனும் முயலுவதுதான் சரியான சிக்கனமுறை என்பதை அவன் அறிந்துகொள்ளுவதில்லை. வன்மையற்ற அவன் கோழை மனது அவனை இவ்வாறு கலக்கிவிடுகிறது.

புதிதுபுதிதான துறைகளில் மேன்மேலும் முயலவேண்டுவது அவசியமாயின மறதியும் அவசியம். பழைய தோல்விகளை எண்ணி எண்ணி ஏங்கும் ஒருவன் நிச்சயமாய்ப் புதிதாக வெற்றியடையமாட்டான். 'போனதெல்லாம் போகட்டும்: இனிமேல் ஒருகை பார்ப்போம்' என்பதுதான் ஒருவனுடைய வீரவாக்காக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவன் மேன்மேலும் விருத்தியடைவான். முந்தின முயற்சி ஏன் வீணாயிற்று? என்னும் அளவில் மட்டிலுமே முடிந்துபோனவிஷயத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டுமேயல்லாது அதற்கு மேல் அதைப்பற்றிய நினைவுக்குச் சிறிதும் இடந்தரவே கூடாது. கடந்துபோன விஷயங்களை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் ஆராய்ந்து அவற்றிலுள்ள ஜயசாதகமான அறிகுறிகளை மட்டிலும் இன்னவென்று தெரிந்து நன்கு வற்புறுத்திக்கொள்ளவேண்டும். மற்றப்படி அவ்விஷயங்களை முழுதும் மறந்துவிடவேண்டும். இதற்கு மனோதிடம் அதிகம்வேண்டும். வெற்றிக்குரிய முறைகளைத் தெரிந்தெடுப்பது அவ்வளவு எளிதான காரியமன்று. எத்தொழிலிலும் முன்னேற்றமடையவேண்டுமாயின் திறமையும், விஷயங்களைச் சீர்தூக்குவதற்கு வேண்டிய நுண்ணறிவும், துணிவும் இன்றியமையாத குணங்களாகும். மறதிக்கும் இக்குணங்களே காரணமாகின்றன.

சிலர்மனம் படம்பிடிக்கும் போடோகிராப்பெட்டி போன்றது. தாம் எப்பொழுதாகிலும் அறிந்துகொண்ட எந்த விஷயத்தையும் அவரால் மறக்கமுடியாது; அநுபவித்த எந்த அநுபவத்தையும் மறக்க முடியாது. சின்னஞ்சிறிய வயதில் நடந்த அற்பவிஷயங்களுங்கூட இன்று நேற்று நிகழ்ந்தனபோல் அவர் மனதில் பதிந்தூன்றி அவர் முன் எப்பொழுதும் நின்றுகொண்டேயிருக்கும். அவர் நிலைமை பரிதபிக்கத்தக்கது என்றேதான் கூறவேண்டும். கலங்கியவெள்ளம் போன்ற அவர்களுடைய நினைவானது ஒருவித முயற்சியிலும் அவர்கள் படிந்து உழையாதபடி அவர்களைத் தள்ளித் தள்ளிக் கடைசியிற் கரைகாண இயலாத பெருங் கவலைக்கடலுள் அவர்களைப் புகுத்திவிடுகிறது.

இதற்கு உதாரணமாக ஆராய்ச்சியாளர் ஒருவர் தாம் நேரில் கண்டறிந்த விருத்தாந்தம் ஒன்றைச் சொல்லுகிறார். ஒரு பிரபல வியாபாரி, கீழ்நிலையிலிருந்து முன்னுக்குவந்தவர், இடைவிடாது உழைக்கும் சுபாவமுள்ளவர், இம்மாதிரியான நினைவுநோயுற்றனர். அதனால் அவர் சிறுபிராயத்திற் செய்த சிறுசெயல்களெல்லாம் அவருடைய நினைவுக்கு வந்தன. அவர் அக்காலத்திலே அற்ப சொற்பம் பிறரிடம் கடனாக வாங்கித் திருப்பிக்கொடாத தொகைகளெல்லாம் அவர்முன் வந்து தோன்றின. உடனே அவற்றையெல்லாம் கடன்காரரின் வாரிசுகளைத் தேடிப்பிடித்து வட்டியுடன் கொடுத்துவிட ஏற்பாடு செய்தார். ஆனால் அன்று முதல் அவர் அதுவரை செய்துவந்ததுபோல் துணிந்து வியாபாரம் நடத்தவில்லை. புதிதாக ஏதாவது ஒரு யோசனையானது மனத்தில் தோன்றும், உடனே அதற்குப் பாதகமாக உள்ள விஷயங்கள் முன்னே நிகழ்ந்தனயாவும், அவைபோன்று பயன்படாதுபோன பழைய நிகழ்ச்சிகள் எல்லாம் ஏகோபவித்து அவர்முன் நிற்கும். அவற்றைக் கண்டு வெருண்ட அவர் மனமானது அவரைப் புதிய முறைகளைக் கையாளவொட்டாது தடுத்துவிடும். பச்சைப்பயிருக்குப் பாய்ச்சும் தண்ணீரைப்போல் பணத்தை இறைத்துவந்த அவர் சில்லறைச் செலவுகளைக்கூடப் பெருந்தொகைகளாகக் கருதலானார். அற்பமான முறைகளிலெல்லாம் செட்டுப் பிடிக்க ஆரம்பித்தார். இதனால் பிறர் நகைப்புக்குத் தன்னை உள்ளாக்கிக்கொண்டாரேயல்லது அவர் வேறுபயனொன்றும் அடையவில்லை. அவர் வியாபாரமும் நாளடைவில் குன்றிக்கொண்டேவந்தது. அவரும் வியாபாரம் குறைந்துபோவதைக்கண்டு மேன்மேலும் கவலையுற்று நன்றாக நோய்வாய்ப்பட்டனர். அவரைப்

பார்த்த வைத்தியநிபுணர் விஷயம் இன்னதென்பதை அறிந்து, சிறிது காலம் அவர் வேலையைவிட்டொழித்துக் கவலையில்லாமல் சௌக்கியமான ஊர் ஏதாவது ஒன்றிலே போய் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அவருடைய உடலானது ஆரோக்கியம் அடைய அடைய நினைவு மறைந்த மறதி உண்டாயிற்று. மறதியுடன் துணிவும் கூடவே வந்தது. அவர் மீண்டும் வியாபாரத்திற் புகுந்து தீரத்தனமான முறைகளை முன்போற் கையாண்டு அதனுற் செழித்து வாழ்ந்துவந்தார்.

மறதியானது பெரும்பாலும் தற்செயலாய் நிகழ்வதன்று. நன்கு பயின்ற மனத்தின் நன்முயற்சியே அது. ஒருவன் திடகாத்திரனுய் ஆரோக்கியநிலையில் இருந்து வலியமனம் பெற்றிருந்தாலன்றி அவனுக்கு மறதியே ஏற்படாது; அல்லது ஒருகால் ஏற்பட்டாலும் ஒழுங்கில்லாதபடி இருக்கும். முக்கியமானது எது, முக்கியமல்லாதது எது, என்பதைத் தெரிந்துகொண்டு, முக்கியமல்லாததை அறவே அகற்றும் மனப்பான்மைதான் அது. மனம் விரிய விரிய இவற்றுள் ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்மியம் நன்கு புலனுகும். அப்பொழுது அல்பமான நிகழ்ச்சிகளும் எண்ணங்களும் பொருட்படுத்தப்படமாட்டா. பெரும் விஷயங்கள்மட்டிலுமே கருதப்படுவன. இதைத்தான் நாகரிகமென்று நாம் சொல்லுகிறேம்.

நோயினுலேதான் ஞாபகப்பிசகு ஏற்படுகிறது என்று நம்முள் பலர் எண்ணிவருகின்றனர். மறதி ஏற்பட்டால், நோயைக் காட்டும் ஒரு அறிகுறியாகவே அதைக் கருதுகின்றனர். உடலானது ஆரோக்கியமான நன்னிலையினின்றும் தவறும்போதுதான் ஞாபகக்குறைவு உண்டாகின்றது என்று கூறுகின்றனர். சிற்சிலநோய்களிற் சிற்சிலவேளைகளில் நோய்காரணமாகவே மறதி உண்டாகின்றது என்பது மெய்தான். ஆனுல் நாம் ஊன்றிக் கவனித்துப்பார்த்தால் ஞாபகசக்தியானது நோயுற்றகாலத்தில் மிகுந்தும், நோயற்றகாலத்திற் குறைந்தும் காணப்படுகிறது. ஆகவே அதிகப்படியான நினைவுதான் நோயின் குறி.

நரம்புகள் பலஹீனப்படுவதாலே மறக்கும் இயல்பு குறைந்துபோக நேரிடுகிறது. உடலின் பொதுநன்மையின்பொருட்டு உடற்கூறுகள் யாவும் தம் நலத்தைக் கருதாது உழைத்துவரவேண்டும் என்னும் உடற்போஷக முறையானது சரிவர நடந்தேறவில்லை என்பதையே இவ்வகையான மறதிக்குறைவானது குறிக்கின்றது. நாம் வேண்டாதபோதும் முன்வந்து நிற்கின்ற நினைவுகள் எல்லாம் உடலின் மேலதிகாரத்துக்கு

அடங்கி நடவாத கலகக்காரர்கள். அவை உடலுக்குச் செய்யவேண்டிய மெய்த்தொண்டு என்னவென்றால் தாம் தலைகாட்டாது மறைந்து போவதைத்தவிர வேறல்ல. அவை உள்ளே மறைந்துபோகாது மீறி வெளியே வருவதானது உடலையும் மனத்தையும் ஆரோக்கியநிலையி னின்றும் வழுவாதபடி பாதுகாத்துவரும் சக்திகள் தம் வலியை இழந்துவிட்டன வென்பதற்குச் சரியான சான்றாகும். மரணகாலம் நெருங்கும்போது சின்னஞ்சிறிய அற்பவிஷயங்களெல்லாம் மறையாது அணியணியாக நினைவின்முன்வந்து நிற்பதற்கு இதுவேதான் காரணம்.

நினைவு கட்டுக்கு அடங்காதுபோய்விட்டால், உடனே சிரமபரி காரஞ்செய்துகொள்ளுவது மிகவும் அவசியம். வேறு இடங்களுக்குச் சென்று நினைவுகளை மாற்ற முயலவேண்டும்; அல்லது அதுவரை வழக்கமாகச் செய்துவந்த தொழில்களைச் செய்யாது சிறிதுகாலம் நிறுத்திவைக்கவேண்டும். பெரும்பாலும் உடல் நோயுற்றிருப்பதா லேயே தோன்றும் இந்தத் துன்பமானது உடல் ஆரோக்கியம் அடைந்த வுடன் அகன்றுவிடுகிறது. சிற்சில வேளைகளில் மனோவியாதியாலும் இவ்வகையான ஞாபகப்பிசகின் தொந்தரவு ஏற்படக்கூடும். அப் பொழுது மனோவியாதிகளைக் குணப்படுத்தவல்ல சில நிபுணர்களிடம் போய் அதற்குத் தகுந்த சிகிச்சைகளால் ஆரோக்கிய மடையவேண்டும்.

இவ்வியாதியானது காலத்தையும் பொறுத்ததாகக் காண்கிறது. இளவெயில்வீசும் ஒளிநிரம்பிய உற்சாகமான காலங்களிலே இந்நோ யானது பொதுவாகத் தோன்றுவதில்லை. ஈரமும் மழையும் சிலுசிலுப் பும் இருட்டும் இந்நோய்க்குத் துணைவர்கள். உறக்கமின்மை, ஓய் வின்மை, திரவியநஷ்டம் போன்ற கவலைதருகின்ற விஷயங்களும் இந் நோய்க்குக் காரணங்கள் என்னலாம். ஆனால் மேலே சொன்னபடி உடல்நோய்தான் இவை யாவற்றிலும் மேலான காரணமென்பதற்கு ஐயமில்லை.

உடலானது நோயற்று ஆரோக்கியநிலையை அடைந்த உடனேயே மறதியும் தளிர்த்துத் தழைத்துச் செழித்தோங்குகிறது. அதனால் நாம் பேன்மேலும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் பல துறைகளி லும் முயலத் தொடங்குகின்றோம். ஆதலால், ஒழுங்காயுள்ள மறதி யானது—துன்பமொழியும் மறதியானது—மாந்தர்க்கு மிகவும் உற்ற துணையாகும்.

---

உ

# யவனமஞ்சரி.

[ஒழுக்க நூல்]

## முதற் பாகம்.

முதல் ஐந்து அதிகாரமும் முன்னுரைபோலும்.

### 1-ம் அதிகாரம் நோக்கம்.

எந்த நோக்கத்திலும் எவ்வித ஆராய்ச்சியிலும் எச் செயலிலும் யாதோ சில நன்மையைக்குறித்து அவ்வம்முயற்சி செய்யப்படுமென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததோருண்மை. ஆனதுபற்றி யாதோ ஒரு நன்மை எவ்வாராய்ச்சியிலும் ஆராய்ச்சிவல்லுநர் நோக்குகிறார்களென, நன்கு கூறப்பட்டுளது. ஆதலினன்றே குறித்த நோக்கமுதலியவற்றி னிலக்காக அமைவதனை நன்மை என்பர். இது பெரிதும் பொருத்த மானதே. மேற்காட்டிய நன்மைதான் இதுவெனப் பலர்க்கும் ஒப்ப முடிந்ததொன்றன்று; என்னை? அதுதான் நோக்கமுதலியவற்றோடு தொடர்புடைய பயிற்சிமாத்திரை யென்பாரும், அப்பயிற்சிக்கப்பாற் பட்டதொன் றென்பாரும் மாறுபடுதலின் என்க. அந்நன்மை பயிற்சிக் கப்பாற்பட்டதென யாண்டுக் கொள்ளப்படுகின்றதோ ஆண்டுப் பயன் பெரிது முடைத்தாதல் காண்க.

செயல்களும் தொழில்களும் சாஸ்திரங்களும் பலவாகையால், நோக்கங்களும் பலவாயின. உதாரணமாக வயித்தியநூலின் நோக்கம் தேக சௌக்கியம்; கப்பல் கட்டுவிப்போரின் நோக்கம்—கப்பலையுண்டாக்கு வது; யுத்தத்தின் நோக்கம்—வெற்றி; திரவியந்தேடலின் நோக்கம்—ஐசு வரியம். இத்தகைய நோக்கங்கள் பலவற்றை ஒரு நோக்கத்தி லமைத்து ஓர் ஆராய்ச்சி செய்வோம். உதாரணமாக:—குதிரையேற்றத்திற்காகக் கடிவாளத்தையும் உடுப்பையும் உண்டாக்குவது ஒருநோக்கம். குதிரை யேற்றமாகிய நோக்கம் யுத்தநோக்கத்திலும், யுத்தநோக்கம் அரசியல் முறையிலும் அடங்குதல் காண்க. சிறுச்சிறு நன்மைகளையடக்கிய பெரிதான நன்மைகளே உலகத்தாரால் வேண்டப்படுவன. இங்ஙனங் கொள்ளல் சத்திப்பயிற்சியே நன்மையென்பார்க்கும் அதற்கப்பாற்பட்ட தே நன்மையென்பார்க்கும் ஒப்பமுடிந்ததென்பது,

## 2-ம் அதிகாரம். மகாநோக்கம்.

எல்லாச் சிறப்புமுயற்சிகளும் எதிர்நோக்கும் ஒரு மகாநோக்கம் தன்னுள் ஏனைய முயற்சிகளையெல்லாம் அடக்குமாயின் இம்மகா நோக்கத்திற்காகவே மற்றும் முயற்சிகளெல்லாம் செய்யப்படும். இம் மகாநோக்கம் ஏனைய நோக்கங்களினுஞ் சிறப்புடைத்து; ஏனெனில் ஒவ்வொருநோக்கமுஞ் சமமாயின் இச்சையே பெருக, எந் நோக்கத்தைப் பற்றவேண்டுமெனத் தெரியாமற் செயலற்று மனிதன் மயங்குவான். இத்தகைய மகாநோக்கம் என்னவென்பதை ஆராய்வது அவசியம். வில்வீரன் குறித்ததோர் இலக்கிற் றன் அம்புகளை எய்யுமாறுபோல, நாங்களும் எமது நோக்கங்களை எய்தக்கூடும். இவ்விதமானல் இம் மகாநோக்கத்தின் சொரூபத்தை ஒருவாறு ஆராய்தல்வேண்டும். அது எத்தொழிற்கு எவ்வாராய்ச்சிக்கு, எச் சாஸ்திரத்திற்கு உரிய பொருள் என்பதை ஆராய்வாம். பலவகை ஆராய்ச்சிகளையுடைத்தாகலான் இவ்வாராய்ச்சி ஓர் மகா சாஸ்திரமாகும்

## 3-ம் அதிகாரம். நன்மை.

இந் நன்மையாராய்ச்சி அரசியலாராய்ச்சி யெனக் கூறுதல் சாலும். அரசியலாராய்ச்சியென்பது அரசர் அமைச்சர் ஒற்றாது செல்வத்தைக் கருதுவதன்றித் தேசத்தின் பொதுநயத்தை ஆராய்வது என்பது இந் நூலாசிரியர் அரிஸ்தாதில் என்பவரின் அபிப்பிராயம். என்னை? அரசியலாராய்ச்சி எந்தெந்தச் சாஸ்திரந் தேவையென்றும் எவ்வெவ் வாராய்ச்சியை எவர் எவர் செய்யவேண்டுமென்றும் எவ்வாறு செய்ய வேண்டுமென்றும் வரையறுக்கின்றது. இவ்வரசியலாராய்ச்சிக்குத் துணையாகவே பொருணூலாராய்ச்சியும் யுத்தநூலாராய்ச்சியும் சொற் பொழிவுநூலாராய்ச்சியும் ஓவியம் சிற்பம் ஆயுள்வேதம் வில்வேதம் முதலிய கலைஞானப்பயிற்சிகளது ஆராய்ச்சியும் மற்றும் பிற ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. இவ்வாராய்ச்சி ஏனையவாராய்ச்சிகளை அடக்கி வியாபிப்பதால் மனிதனுக்குவேண்டியபயனைக் கொடுக்கத்தக்கதாயிருக்கும்.

தேசநன்மையும் தன்நயமும் முரண்பட்டால், தன்நயத்தினும் தேச நன்மையையே கருதுவது நன்று. ஒருவர்க்குச் செய்யும் உதவியினும் தேசமுழுவதற்குஞ் செய்யு முதவி சாலச் சிறப்புடைத்து. இது நிற்க.

எல்லா ஆராய்ச்சிகளிலும் ஒரே அளவு நுட்பத்துடன் ஆராய்தல் இயலாததாகலின் எமதாராய்ச்சியிலும் ஆராய்ச்சிக் கேற்ற நுட்பத்துடன் ஆராய்வாம். அரசியல்நோக்கமாகிய நன்மைகள் பலவகைப்படுகின்றமையால், சிலர் அவற்றினும் வேறாய், இயற்கையிலே நன்மை தீமை எனப் பாகுபாடு இல்லையென்றும், இப்பாகுபாட்டை மனிதர் ஓர் உடன்படிக்கைச் சபையில் செயற்கையாகச் செய்தனர் என்றுங் கூறுவர்.

இனி எது நன்மையென்பதில் ஐயம் நிகழும். ஏனெனில் நன்மை தீமையைப் பயக்கின்றது. ஐசுவரியம் என்னும் நன்மை சனங்களைத் தீயராக்குவதுண்டு. வீரியம் என்னும் நன்மைக்காகச் சிலர் உரிமையை இழக்கிறார்கள். இச்சாஸ்திரத்தில் எம்மாலெடுத்தாளப்பட்ட கொள்கைகள் எமது நோக்கத்தை நுட்பமாயாராய்வதற்குத் தடையாயிருந்தாலும் அவற்றை யொருவாறு ஆராய்வாம். ஐயப்பாடுடைய சாதனங்களிலிருந்து அநுமித்தால் ஐயமாகிய சாத்தியமே தலைப்படும். இந்நூல் கற்பவர் இவ்வாராய்ச்சிக் கேற்ற நுட்பத்தைமாத்திரம் நம்மிடத்தில் எதிர்பார்த்திருக்கலாம். ஒவ்வொரு நூலிலும் அதற்கேற்ற நுட்பத்தை அறிவுடையோர் தங்கள் நூல்களிற் காட்டுவர். கணித சாஸ்திரவல்லுநரின் நுண்ணறிவை ஏனைய சாஸ்திரவல்லுநரிடம் எதிர்பார்த்தல் தவறு. ஒவ்வொருவரும் தமது கலைஞானப்பயிற்சியிலாயினும் தமக்கிஷ்டமான சாஸ்திரத்திலாயினும் வல்லுநராவர். எல்லாச் சாஸ்திரங்களையும் செவ்விதாகக் கற்றவரை நல்லறிஞர் என்போம்.

இளைஞர் அரசியல்விஷயங்களி லாராய்ச்சிசெய்யத்தக்கவரல்லர். அநுபவங்குறைந்தவராகலானும், மனப்போக்கிலழுந்தியிருப்பராகலானும் இளைஞர் அரசியல் ஆராய்ச்சியின்பயனை அறிபார். இவ்வாராய்ச்சிக்கு அநுபவமில்லாத வயோதிகரும் இளைஞரைப்போல விலக்கப்பட்டவராவர்; அநுபவக்குறைவே குற்றம். வயதுக்குறைவு குற்றமன்று.

இளைஞர் புத்தியின் ஆஞ்ஞைப்படி ஒழுகாமல் மனப்போக்கின்வழி யொழுகுபவராகலான் அவரை அநுபவமில்லாதவ ரென்கிறோம். புலன்களிற் சிக்குண்ட தூர்த்தரின் அறிவால் பயனில்லை. ஐம்புலனொடுக்கிய சான்றோர் தமது அறிவை வளர்த்து அதனாற் பயனெய்துவர்.

## 4-ம் அதிகாரம். நன்மையே இன்பம்.

இதுகாறும் இந்நூல் கற்பவர் எந்நோக்கத்துடன் கற்கவேண்டுமென்பதையும் எவ்விஷயம் ஈண்டு ஆராயப்படுமென்பதையும் ஒருவாறு இம்முகவுரையிற் கூறினேம். இனி இந்நோக்கங்களில் எது மகாநோக்கமென்பதை ஆராய்வாம். புலவராயினும் பாமரராயினும் நோக்குவது இன்பம் என்பது எமது அபிப்பிராயம். இன்பத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள் பல. பாமரர் இன்பந்தருவது செல்வமென்றும் தேகாரோக்கியமென்றும் புகழ் என்றும் பலவாறு கூறுவர். ஒருசாரார் ஒருவாறு கூறுவர்; மற்றொருசாரார் வேறொன்றென மொழிவர். ஒருவரே ஒருவேளையி லொன்றையும் வேறொருவேளையில் வேறொன்றையும் இன்பமெனக்கொள்வர். சிலர் சுகவீனத்தின்பின் சுகத்தை இன்பமென மயங்குவர். நல்கூர்ந்தான் செல்வத்தை இன்பமென அறியாது கூறுவன். சிற்சில தத்துவஞானிகள் உண்மையான ஒருவகைத்தொடர்பும் இல்லாத ஒப்பற்ற நன்மையொன்று உளதென்பர். (ஒரு நன்மையைப் பிறநிமித்தமில்லாமல் அந்நன்மைக்காகவே பற்றுவோமாயின் அதை ஒப்பற்றநன்மை யென்பாம். ஒப்பற்றநன்மை பாமநன்மை என்பன ஒருபொருட்கிளவி.) அபிப்பிராயங்கள் பலவென்பது வெளிப்படையாகலான் புத்திக்கு நலமாய்த் தோன்றுவனவற்றை எடுத்து ஆராய்வாம்.

ஆதார பிரமாணங்களை எடுத்தாண்டு அநுமித்து வேறு பிரமாணங்களைப் பெறும் முறைக்கும் அப்பிரமாணங்களுக்கு உடன்படாது எமது ஆராய்ச்சியின்பயனாக அவ்வாதார பிரமாணங்களைக் கற்பிக்கும் முறைக்கும் உள்ள பேதத்தை நாம் கவனிக்கவேண்டும். உரையளவையால் விதித்த பொதுப்பிரமாணத்தின்வழி ஒழுகுதலோ அல்லது வழியளவையான் எது பிரமாணமென ஆசங்கித்துப் பரிசுரித்து வலியுறுத்துவதோ முறையென ஐயப்படுவேம். நன்று, யாம் அறிந்தவற்றிலிருந்தே தொடங்கவேண்டும். அறிந்தபொருள் யாம் அறிந்தபொருளும் பிறரறிந்தபொருளுமென இருவகைத்து. யாம் அறிந்தபொருளிலிருந்தே தருக்கஞ்செய்யத்தொடங்குவது உத்தமம்.

கற்பழக்கமுடையவரே எது நன்று எது தீதென ஆராய்தற்கு உரிமையுடையர். இத்தகையார் பிரமாணத்தைத் தாமே அறிந்தும் பிறர்

கூறியபோதேயறிந்தும் தெளிந்துகொள்வர். ஒருவராலும் எது நன்மை எது தீமையென நிலைநிறுத்த இயலாதாகையால் நாம் அவற்றை அறிவதற்கு நற்பழக்கமுடையராயிருத்தல்வேண்டும். நற்குணமில்லாணும் அவற்றை மொழிந்தவுடன் உடன்படாதானும் 'ஈசியஸ்' என்னும் புலவரின்கூற்றை நோக்குவாராக. "ஒருவன் தன்னிலைமையை யறிய வேண்டும்; நல்லவனுகில் ஞானிகளினுரைகளை மீறியொழுகலாகாது; மேலும் தன்னியல்பை அறியாதானும் புத்திமதி கேளாதானும் ஒன்றற்கும் உதவான்".

## 5-ம் அதிகாரம். மகாநோக்கம் இன்பவாழ்வோ?

பெரும்பாலும் தலைவர்களது வாழ்க்கைவரலாறுகளைக் கற்று எவ்வகைவாழ்க்கை நன்றென ஆராய்ந்து நாம் தீர்மானிக்கிறோம். கல்வியறிவில்லாத பொதுமனிதர் இன்பமே நன்மைகளில் மேலானதென்பர். சந்தோஷமானவாழ்க்கை இன்பம், தேசமுன்னேற்றம், ஞானமென மூவகைநோக்கமுடைத்து. பொதுமக்கள் விலங்குத்தன்மையுடையராதலால் இன்பவாழ்க்கை நன்மையுடையதென அதை நாடுவர். தலைவர்களும் இன்பநோக்கமுடையராதலின் இன்பநோக்கமும் போற்றப்படும். இஃதிங்ஙனமாக, கல்வியறிவுடைய அறிஞரும் அரசியல் நடத்துவோரும் புகழைத்தேடுவதில் தங்கள்காலத்தைக் கழிப்பர். புகழ் பிறர்மேற் றங்கியிருப்பதாலும் புகழை வினைமுதல்வன் தானே பெருக்குவது இயலாததாகலானும் அதை நன்மையாகக்கருதுதல் தவறு. ஒரு நன்மையைப் பிறரால் ஆக்கவும் அழிக்கவும் இயலாதாகையால், அதை ஒவ்வொருவரும் தாமே தேடவேண்டும். தங்கள் நற்குணங்களை உலகம் மெச்சுதற்காகப் பொருளையும் புகழையும் மக்கள் விரும்புகிறார்கள். புகழினும் நற்குணம் சிறந்தது.

நற்குணம் எல்லா நன்மைகளினும் பெரிதென்பதை ஆசங்கிப்பாருமுளர். எல்லா நற்குணங்களும் பொருந்தியவர் நித்திரைசெய்து செயலற்றுச் சோம்பித்திரியக்கூடும். மேலும், அவர் பற்பல துன்பங்களையும் இடர்களையும் அநுபவிக்கக்கூடும். பிறர்க்கு யாதொரு தீங்குஞ் செய்யாத இத்தகைய நல்லவரையும் சந்தோஷமுடையாரென மொழியாதிருப்பது நோக்கற்பாலது. மூன்றும் நோக்கமாகிய தியானத்தைப் பற்றிப் பின்னர்க் கூறுதும். பணத்தைச் சேகரித்ததால் விளையும்

இன்பம் இயற்கைக்கு விரோதமானது. அன்றியும் திரவியந்தேடல் மற்றும் ஒரு நோக்கத்திற்குத் துணையாவதொழிய அது ஒரு மகா நோக்கமாகாது. இன்பமும் நற்குணமும் முறையே மகாநோக்கமென ஆற்றலுடன் வாதிக்கப்படினும் அவை மகாநோக்கமன்று.

## 6-ம் அதிகாரம். நன்மையின் இலக்கணம்.

இவ்விடத்து எது நன்மை என்பதை ஆராய்வாம். எமது அபிப்பிராயமும் எமது நண்பர் பிளேற்றோவினுடைய அபிப்பிராயமும் ஒன்றோடொன்று மாறுபட்டிருப்பினும், இருவரும் தத்துவஞானிகளாகலின் நாம் உண்மையைக் கடைப்பிடிப்பாம். பிளேற்றோவினுடைய கொள்கைக்கு மாறாக உலகத்திற் பல மகாநன்மைகள் இலவென்றும் எல்லாவற்றிலும் பிரதானமான ஒரு மகாநன்மையுண்டென்றும் நிரூபிப்பாம். பிளேற்றோவின்கொள்கை:— இவ்வுலகில் இருக்கும் பொருள்கள் எல்லாம் சுத்தப்பிரபஞ்சமாகிய நினைவுலகிலிருக்கும் பொருள்களின் விருத்தி. அதாவது உலகப்பொருள்கள் இலட்சணங்களிற் குற்றமுடையனவென்றும் இப் பூரணப்பொருள்களெல்லாம் இலட்சணங்களில் யாதேனும் ஒரு குறைவுமின்றிச் சுத்தமாய் நினைவுலகிலிருக்கின்றனவென்றும் இந்நினைவுலகு, புலன்களால் அறியப்படும் எங்கள் நிலவுலகிலும் உண்மையானதென்றும் பிளேற்றோ கூறுவர். முதலாவதாக:—நன்மையென ஒரு இனம் இல்லை. (Genus) ஒரு இனத்தைச் சேர்ந்த இருபொருட்குப் பொதுவாயுள்ள பொருளைச் சுட்டிக்காட்டி அதற்குப் பிளேற்றோ பெயரிடவில்லை. ஒருபொருள் முன்தோன்றியும் மற்றொன்று பின்தோன்றியும் இருப்பின் இவ்விரு பொருட்கும் பொதுவாய பொருள் இல்லை யென்றார். மேலும் இரு எண்களுக்குப் பொதுவாய ஓரெண் இல்லையென்றார். நன்மையென்னும் விசேடணம் குணிகளுக்கும் குணங்களுக்கும் தொடர்புகளுக்கும் பிரயோகிக்கப்படும். சுதந்தரமாய் இருக்கும் குணிப்பொருள் காலத்திலும் இடத்திலும் தோன்றும் மாறுபாடுடைய குணங்களிலும் முந்தியது. இரு குணிகளின் குணபேதத் தொடர்பு குணியின் இடையிடையே தோன்றுவது. குணத்திற்கும் குணிக்கும் ஒரு பொதுப்பொருள் இல்லையெனப் பிளேற்றோவின்மதம்பற்றிக் காட்டினும்.

இரண்டாவதாக: நன்மையென்னும் பதம் பேதமான பலவகையாய்ப் பிரயோகிக்கப்படும். உதாரணமாகக் கடவுள் நியாயம் முதலிய சுதந்திரப்பொருள்கட்கும் அறங்கள் முதலிய நிலைகட்கும் பெரிய சிறிய

என்ற தொடர்புகட்கும் காலத்திற்கும் இடத்திற்கும் நன்மையை விசேடமாகப் பிரயோகித்தல் வழக்கம். ஆகையால் நன்மை என்னும் பதத்திற்குப் பல கருத்துண்டு. இவ்வாறு பல கருத்துண்டாயினும் நன்மைகள் ஓரினத்தைச் சேர்ந்தனவே.

மூன்றாவதாக: நன்மை ஒரே யொரு பொருளுடைத்தாயின் ஒரே யொரு சாஸ்திரம் வேண்டப்படும். அவ்வாறின்றி, உலகிற் பல சாஸ்திரங்கள் உண்டென்பதை நாம் அறிவோம். யுத்தத்தில் யூகமும் வைத்தியத்தில் சுகமும் தேகாப்பியாசத்தில் எத்துணை அளவும் வேண்டுமென்று பல ஆராய்ச்சிக ளுள.

நான்காவதாக: சாதாரண மனிதனுக்கும் தனது நினைவுலகில் இருக்கும் பூரணமனிதனுக்கும் பெரும்பேதம் உண்டென்று பிளேற்றோ கூறுகின்றார். மக்கட்டன்மையில் இருவருக்கும் பேதமின்றெனபது எமதுகொள்கை. நினைவுலகில் இருக்கும் ஒப்பற்ற பரமநன்மைக்கும் நிலவுலகில் ஒப்புநோக்கின நன்மை எனப்படும் உலகநன்மைக்கும் நன்மைத்தன்மையில் ஒருபேதமு மில்லை.

ஐந்தாவதாக: பிளேற்றோ நன்மையை நித்தம் என்பதனாற் சுகமென்ன? நன்மை நித்தநன்மையாயினும் நன்மைத்தன்மையில் மிகுவதில்லை. ஒரு வெள்ளைநிறமுடையபொருள் நீடூழிகாலமிருப்பினும் வெண்மையாகியபண்பிற் பெருகாது. பிதாக்கோறுய்ஸ் செயசுப்பஸ் ஆகிய இருவாதுகொள்கை இதிலும் சிறந்ததுபோலும்; இவற்றையெல்லாம் வேறோர் அமயத்தில் ஆராய்வோம்.

இனி, பிளேற்றோவினுடைய கொள்கையின்படி இருவகை நன்மைகளுள. நன்மைகள் நிலவுலகில் நித்தமாய் ஒவ்வோர் பூரண அமைப்புப் பெற்றிருக்கின்றனவென்றும் நிலவுலகநன்மைகள் தோன்றிநின்றழியும் தன்மைத்தாய் நினைவுலகநன்மைகட்கிணங்க ஒவ்வோர்சிறப்பாய் எங்களுலகிலிருக்கின்றன என்றும் கூறுவர் ஆசிரியர் பிளேற்றோ. நிலவுலகின்கண் ணமைக்கப்பட்ட பரமநன்மைகளுக்கு ஆதாரமாய் நிலவுலகிலிருப்பது ஒப்புநோக்கிக்கூறும் ஆபூரணநன்மையாகிய விசேட நன்மையாம். பயனைகருதாமல் எப்பொருளை இச்சிக்கின்றோமே அதுவே சுத்தநன்மை எனப்படும் உலகநன்மை. உதாரணங்கள் இன்பம்,

காட்சி, புகழ், ஞானம் முதலியன. ஒரு நன்மையை எடுத்து அதன் பயன்களை அதினின்றும் வேறுய்ப் பிரித்து விலக்கினுல் நன்மை என்ற பொருளில்லாமல் எண்ணமும் அமைப்பும் மாத்திரம் எஞ்சிநிற்கும். இவ்வாறு நாம் பெற்ற பொருளின் அமைப்பு (குணமில்லாக்குணிபோல) இல்பொருளாகும். சிறப்புப் பொருளில்லாவிடின் இச்சிறப்புப்பொருள்களின்றியிராத பொதுப்பொருளும் இல்லாது ஒழிந்துவிடும். வெண்மையானபொருள்களில் வெண்மைத்தன்மையைப் பிரித்துச்சிந்திக்கலாம். ஆனுல் புகழ், ஞானம், காட்சி, இன்பம் முதலியவற்றில் பொது இனம் இன்மையான் அவை தனிப்பொருள்களாகவே கருதப்படும். இவ் வெவ்வேறுபொருள்களுக்கு நன்மை பொதுக்குணமாயின் நன்மையென்னும் மொழி பலபொருளுடைத்து. இத்தகைய நன்மைத்தன்மை இப்பொருள்களில் இன்றெனக் காட்டினும். இவற்றில் பொது அமைப்பே இல்லையானுல் ஏன் பொதுச்சொல்லால் இவற்றினை மக்கட்குரிய நன்மையெனக் கூறுகிறேம்? எல்லாம் நோக்கமுடையனவாகலானும் உவமானங் கருதியும் காட்சி, இன்பம், ஞானம் முதலியவற்றை நன்மை யென்றேம். இஃது மற்றென்று விரித்தலென்னும் இழுக்குடைத்தாகலானும் இவற்றைத் தத்துவ ஆராய்ச்சியிற் செய்வதே முறையாகலானும் இவ்வாராய்ச்சியை இத்துடன் நிறுத்துவாம்.

நன்மை பலவானுலும் ஓரே பொருள் உடைத்து என ஒப்பினும் ஒப்பற்ற பரமநன்மை உள்பொருளென ஒப்பினும், அப் பூரணநன்மை மனிதன் அடையக்கூடியதென வற்புறுத்துதல் தவறு. பொதுநன்மையின் இயல்பை விளக்கினவழியே சிறப்புநன்மையை அறியலாமென்பது முறைபோலத் தோன்றினும் உலக அநுபவத்திற் சிறப்புநன்மை அறிவதற்குப் பொதுநன்மையறிதல் அவசியமன்று என்பது வெளிப்படை. சாஸ்திரநூலாய்ந்த ஆசிரியர்களும் கலைஞானப்பயிற்சியில் வல்லுநர்களும் பொதுநன்மையை அறியாதிருந்தும் தத்தம் கலைஞானப்பயிற்சிகளுக்கும் சாஸ்திரங்களுக்கும் ஏற்ற முறையாகவே தமது ஆராய்ச்சிகளைச் செய்கிறுர்கள். இப் பொதுநன்மையை அறிவதனுல் தச்சனும் நெசவுக்காரனும் தத்தம் தொழிற்கண் அடையும் நன்மை யாது? வைத்தியன் பொதுப்பொருளாகிய சுகத்தைத் தேடாது ஒருவனின் சுகத்தையே தேடுகிறுன்.

## 7-ம் அதிகாரம். மனிதனின் சிறப்புநோக்கம்.

இனி மகாநோக்கமென்பது என்ன? மகாநன்மை என்பது என்ன? நன்மை வெவ்வேறு கலைஞானங்களில் வெவ்வேறுகப் பேதமடைகின்றது போலும். வைத்தியத்தி லொன்றுயும் யுத்தத்தில் வேறென்றுயும் ஒரு மகாநோக்கம் கருதியே வைத்தியத்தின் நன்மையும் யுத்தத்தின் நன்மையும் மற்றும் பிற நன்மைகளும் தேடப்படுகின்றன.

இப்படி ஒரு மகாநோக்கமுண்டாயின் அது எம்மாலடையத் தக்கது. சில நோக்கம் தன் இயல்பிலே மேன்மையுடையதாயும், சில துணைக்காரணங்களாயும் உள. சந்தோஷம் வேறோர் நன்மைக்காக விரும்பப்படும் நன்மையன்று. அதை அதன்காரணமாகவே தேடுவோம். மற்றும் புகழ், இன்பம், சுகம், யுத்தம் முதலியன சந்தோஷமடைவதற்குத் துணைக்காரணங்களாகவே தேடப்படுவன.

சந்தோஷம் என்புழி நாம் ஒருவாது சந்தோஷத்தையே குறிக்கிறேம்; ஒருவனது சந்தோஷநிலைக்குப் பிறருடைய சந்தோஷநிலையும் தேவையாஞல் அது அவனது மனைவியின் சந்தோஷமென்றும் மக்களின் சந்தோஷமென்றும் அயலாரது சந்தோஷமென்றும் முடிவின்றி அநவத்தைப்பட்டு அடைதற்கரியநிலையாய்விடும்.

சந்தோஷம் ஓர் மகாநோக்கமென்பதை யாரும் மறுராயினும், அதன் இன்றியமையா இலட்சணங்களை எடுத்தோதி வரைவிலக்கணம் கூறுவது நல்லது. சந்தோஷத்தின் தன்மை எம்மனிதனினும் நோக்கி அறிதற்பாலது. மனிதனின் பொதுத்தொழில் என்ன? தச்சனுக்கும் செம்மானுக்கும் சிறப்புத்தொழில் உண்டாயின் மனிதனுக்கும் சிறப்புத் தொழில் உண்டு. அது என்ன? வளருந்தன்மை புல் பூண்டு மிருகங்களுக்கும் பொது. புலன்வழிச்சேறல் மனிதனுக்கும் விலங்கிற்கும் பொதுவாகலான், உண்டுடுத்து இன்புறுதல் மனிதனின் சிறப்புத் தொழிலன்று. பகுத்தறிவின்வழி ஒழுகுதலே மனிதனின் சிறப்புத் தொழில்.

பகுத்தறிவு இருவகைப்படும். ஒன்று சுத்தபுத்தி; மற்றையது சுத்தபுத்தியின் ஆஞ்ஞைப்படியொழுகும் தத்துவம். மனிதனின் முயற்சி தன் புத்திதத்துவத்தைப் பயிற்சிபண்ணுவதே. யாழ்வாசிப்பவரின் தொழில் யாழ்வாசிப்பது; யாழ்வல்லுநரின் தொழில் யாழ்வாசிப்பதில் நுண்ணிதாய சுவையைப் பயப்பிப்பதாம். மேன்மக்களின் தொழில் நல்லொழுக்கத்தோடுவாழ்தலாம். மேன்மகன் தன் நற்குண நற்செயலிலே மேம்பட்டுச் சுத்தபுத்தியை அப்பியசித்துத் தியானநிலையை அடைவன். இந்நிலைக்கேற்ற பருவம் வேண்டும். என்னே? கோடையில் நாள்முழுவதும் மழைபெய்தாலும் கோடை மாரியாகாது. சொற்ப காலத்திற்கு ஒருவன் சந்தோஷமாகவிருந்ததனுல் அவன் சந்தோஷநிலை அடைவதில்லை. சந்தோஷநிலை அடைவதற்கு ஒருவன் நீடித்தகாலம் சந்தோஷமாய் இருக்கவேண்டும். முதலிற் சில குறிப்புக்களைக் குறித்துப் பின்னர் அக்குறிப்பை விரிக்கும் முறையை எல்லாச்சாஸ்திரவல்லுநரும் கைப்பற்றுகிறார்கள். இந்த ஒழுக்கநூற்சாஸ்திரத்தில் விஷயம் விரிந்து கிடப்பதால் நாம் அவ்வளவு கிரமமாகவும் நுண்ணிதாகவும் ஆராய்ச்சி செய்யப்புகுந்திலேம். தச்சனும், கேத்திரகணிதனும் ஒரு கோணத்தை இருவேறுவிதமாக நோக்குவர். தச்சன் தன் தொழிற்கேற்ப ஒருவாறு மட்டமாய் அளவைசெய்வான். கணிதசாஸ்திரி மிகவும் நுட்பமாக அளப்பன். எனினும், எவ்வாராய்ச்சியிலும் காரண காரியத் தொடர்பு கவனிக்கப்படும். சாஸ்திர உண்மைகள் பெரும்பாலும் நிரூபித்துக் காட்டப்படாதன. சில உண்மைகளை வேதனுமானத்தாலும், சிலவற்றைக் காண்டல் என்னும் வாயிற்காட்சியானும், சிலவற்றை ஒருவகைப் பயிற்சியானும் நாம் அறிகிறோம்.

[தொடரும்.]

த. இராமநாத பிள்ளை, B.A.

# யாப்பருங்கலவிருத்தி அபிதான அகராதி

'யாப்பருங்கலவிருத்தி'யைப் பலவருஷங்களுக்குமுன்பு நான் படிக்கநேரிட்டபோது அதில் எடுத்தாளப்பட்ட நூல்கள் பல தற்காலத்திற் காணக்கிடைக்கமாட்டா என்று தெரிந்ததால் மேற்கோள் நூல்களின் பெயரைக் குறித்துவைத்தேன். உதாரணச்செய்யுள்களில் அரசர் முதலிய பெரியோர்பெயர்களும் ஊர் முதலியவற்றின் பெயர்களும் சிற்சில வந்திருப்பதுகண்டு அவைகளையும் குறித்துவைத்தேன். இக்குறிப்புக்களைக் கொண்டு, விருத்திக்காரர்காலத்திற் கிடைக்கக்கூடியதாயிருந்த நூல்கள் எவை எனவும், அவருக்குப் பிந்தி இறந்துபோனவை எவை எனவும், அவைகளின் போக்கு எப்படி எனவும், மேற்கோட் செய்யுள்களிற் சொல்லப்பட்ட பெரியார் ஊர் முதலியவைகளைப்பற்றி அச்செய்யுள்களால் விளங்குவது என்ன எனவும் ஒருவாறு முடிவுசெய்ய யானும் முயலலாம் என்ற துணிகரம் என்னைப் பற்றியிருந்தது. நாளாக நாளாக அத்துணிவு என்னைவிட்டு நீங்க, அறிவு கேள்விகளால் வல்லாரே அம்முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று தோன்றியது. ஆகவே, அன்னோருக்குச் சற்றுவது உதவியாக இருக்குமென்று எண்ணி இவ் அகராதியை வெளியிடலானேன். இவ் வகராதி வேறுசில முயற்சிகளுக்கிடையே தயாரிக்கப்பட்டமையால் இதிற் சிலபெயர்கள் சேர்க்கப்படாமல் தவறி விடப்பட்டிருத்தலுங்கூடும். குற்றங்கள் பல இவ்வகராதியிற் காணக் கிடைக்கும் என்பதை நன்றாய் அறிந்தவனுயிருந்தும் அதன் நிமித்தமாகவேனும் செம்மையான அகராதி ஒன்றைப் பிறர் எவரானும் செய்து தமிழ் உலகுக்கு உதவுவர் என்று எண்ணியே இதை வெளிடத் துணிந்தேன்.

குறிப்பு: நான் உபயோகித்தது மகா-ா-ா-ஸ்ரீ பவாநந்தம்பிள்ளையவர்கள் பதிப்பு (1916—7). சூத்திர எண்ணும் பக்க எண்ணும் குறித்திருக்கிறேன். உதாரணமாக, 3: 45 என்றால், சூத்திரம் 3 எனவும் பக்கம் 45 எனவும் கொள்ளவும். புள்ளிகள்(.........)காணுமிடத்து, அச்சொற்கள் நூலிற் பல இடத்தும் காண்பன எனக் கொள்ளவும்.

தி. கோ. ஆ

## நூல்களும் நூலாசிரியரும்.

அகத்தியம். 82:282–83:294–84:308–95:528

—தொல்காப்பிய அகத்தியமுடையார். 95:530

அகத்தியனார். 3:45–95:414, 523, (527).

—ஆணையாற் செய்யப்பட்ட நூல்கள். 95:414, 415

அகநானூறு 95:504

அஞ்சனம். 95:540

அடிநூல் (நக்கீரர்) 93:348

அணிநூல் 23:99–95:532

—உடையார் காட்டிய நாலடியார்ச் செய்யுள். 57:219

அமிர்தபதி. 95:487

அவிநயம். 1:22–15:69–95:411, 532, 537

அவிநயனார். 1:27, 28, 30, 31–3:37, 46–5:47–9:54–12:65–13:65–14:68–15:69, 71–16:82–21:92–26:110–28:112–32:123–37:147–40:155–41:159–50:179–51:180–53:188–56:211–57:214–59:227–60:230–61:234-62:238–63:240–66:245–67:249–69:254–71:256–72:258–73:260–76:269–77:273–78:276–79:278–82:285–82:290–84:308–85:308–86:323–87:331–88:333–89:334–90:339–91:342–93:349–94:335–95:372, 389, 415, 417, 418, 535

அவிநயனார் காட்டிய பாட்டு 57:217–93:345

அவ்வை. 95:496 (மேற்கோள் செய்யுளில்) ('ஒளவை' பார்க்க)

அறிவுடைநம்பி செய்த சிந்தம்: 93;352

ஆதிநாதராய்ந்த நூல்: 95:490

ஆசிரியர் ... ... ...

இடைக்காடர்: பாடிய ஊசி முறி 95:375

இரணமாமஞ்சுடை 95:490

இராமயணம்: 62:238-95:378

இறையனார் களவியல்: 55:201

இன்மணியாரம்; 95:540

இன்னிலை 93:351
உதயணன்கதை: 52:186–53:195–69:253–74:262
ஐங்குறுநூறு: 19:86–32:122
ஒருசார் ஆசிரியர் ... ... ... ...
ஔவையார்: 6:49,–93:351–('அவ்வை'பார்க்க)
கடியநன்னியார்: 71:256
—செய்த கைக்கிளைச்சூத்திரம் 55:204
கணக்கியலுள் புறநடைஎடுத்தோதினர் அவிநயனர்: 15:69
கண்ணனர் (கவி) 95:512 (மேற்கோள் செய்யுளில்)
கபிலர்: 93:351
கருடநூல்: 95:363 (மேற்கோள் செய்யுளில்)
கருநாடகச்சந்தம் (குணகாங்கி): 95:490
கலித்தொகை: 15:75–27:111,112,–85:310–86:320
கலியாணகாதை: 53:195–72:262
கல்லாடர்: 93:351
காக்கைபாடினியம்: 95:411
காக்கைபாடினியார்: 1:31–3:37,46–5:48–8:52–9:54–10:58–11:61 –12:64–15:70–16:82–21:91–22:96–23:99–24:100 –26:108–27:110–28:112–32:121,123,127–37:144, 148–50:179–53:188–56:210, 211–57:214–59:227 –60:230–61:233, 236,–62:238–63:240–66:245 –67:247–68:249–72:258–73:260–76:268–77:273 –78:276–79:277–82:285–83:290–84:297–85:308 –86:324-87:331–88:332–89:334–90:339–91:342 –93:349–94:355–95:408,418,420,456,457.
—(மேற்கோள் செய்யுள்களில்):—1:20–56:212–95:408
காரைக்காற்பேயார்: 93:352
காலகேசி: 95:540
குடமூக்கிற்பகவர்: 93:350
குணகாங்கி: 95:490
குண்டலகேசி: 3:40–95:487, 488, 540
குமரசேனாசிரியர்கோவை: 95:486

குறள். ('திருக்குறள்') பார்க்க
குறுந்தொகை: 15:71, 73,–27:111,–29:116,–53:188,189–69:252,
–71:256,–74:261,–94:356, 374,–95:419
குறவேட்டுவச்செய்யுள்: 95:461
கையனார்: 1:25,28–34:129–39:149–47:170–95:389
–காட்டியபாட்டு 37:136
கொன்றைவேந்தன்: 63:240
கோவை(சான்றோர்), 95:418
சங்கபாப்பு: 1:21, 22, 24, 25, 27–16:78–32:124–57:214
–உடையசர்: 8:53–27:109–49:174–57:215–79:278
சந்திரகோடிச்சந்தம் 95:490
சாந்தோபிசிதிகள் 95:456
சான்றோர் ............
சாணுச்சிரயம் 95:490
சிந்தம் (அறிவுடைநம்பிசெய்த)–93:352 ('சந்தம்' பார்க்க)
சிந்தாமணி: 95:453, 487, 488,–37:140
சிலப்பதிகாரம்: 75:264
சிறுகாக்கைபாடினியம்: 95:411
சிறுகாக்கைபாடினியார்: 1:31–8:54–9:54–12:65–16:82–21:92–27:
111–37:144?–41:159–50:178–53:188–56:211, 212–
61:233,–62:238–63:240–66:245–68:249–71:256–72:
258–73:260–75:265–77:273–82:290–87:331–89:331,
334–91:342–93:343
–(மேற்கோள் செய்யுளில்) 56:212
சீவகசிந்தாமணி ('சிந்தாமணி'பார்க்க)
சூளாமணி 95:364, 367, 455, 482, 484, 485, 487, 488, 489–
16:81–22:95–24:100, 101,–25:102–28:113,–37:141–
53:198
செயதேயம் 95:490
செயன்முறை 82:282,–83:294
செயிற்றியம்: 82:282–83:294–84:308–95:539

செய்யுளியலுடையார்: 29:118–31:132–53:195
–நான்மணிக்கடிகையை மேற்கோள்காட்டல், 57:219
தக்காணியம்: 95:537
தத்துவதரிசனம் 95:540
தமிழறியும்பெருமாள்கதை: 36:133
தமிழ்முத்தரையர்கோவை, 95:486
தாரணை நூல்: 95:516
திணை நூல் 95:458
திருக்குறள் 2: 32, 33, 34–4:40, 43,67,68–10:58,–15:71, 73–18:85–30:152–32:122–36:133–37:134, 137, 138–40:155–53:192, 193, 195–57:213, 216, 218, 221–59:224, 225, 226–60:232–62: 238–95:363, 371, 377, 420, 465, 501
–'வள்ளுவன்பாட்டு' பார்க்க.
திருமந்திரம்: 93:352
தென்தமிழ்நூல்யாப்புரைத்தான்: 95:420
தேசிகமாலை 52:186
தொல் ஆசிரியர்...............
தொல்காப்பியம்...........49:174...........
–தொல்காப்பிய அகத்தியமுடையார் 95:530
–மேற்கோள் செய்யுளில் 1:20
–அச்சுப்பிரதியிற் காணாத சூத்திரம் 32:124
நக்கீரர்: 36:133–95:414
–நாலடிநானூற்றுவண்ணம்: 57:217
–அடிநூல்: 93:348,–95:414(மேற்கோள் செய்யுளில்)
–நூல்: 95:414
–எழுகூற்றிருக்கை: 95:498?,500
நத்தத்தம்: 75:411,413
நத்தத்தனார்: 24:100–27 : 110–32 : 123–37 : 144,147–40 : 156–50 : 179–51 : 180–53 : 188–79:277–94:356–95:407, 415,429.
நல்லாதனார்: 15:205?

நல்லாறனார்: 53:196–55:205?–93:353–95:429
–நல்லாறன்மொழிவரி: 95:537
நற்றத்தனார்: 1:18,19–8:53–15:70–57:215
–(மேற்கோள் செய்யுளில் நற்றத்தர் எடுத்துக்காட்டு): 57:215
–(மேற்கோள் செய்யுளில்): 1:20
நாலடிநாற்பது
–உடையார்: 31:121
–என்னும் (அசைப்) புறநடை 1:32
நாலடியார், 7:50–37:141–57:219–60:229, 230–61:234, 235.
நான்மணிக்கடிகை 40:154–57:219–95:371
நீலகேசி 3:40–95:487, 540
பத்தினிச்செய்யுள் 93:351
பத்துப்பாட்டு: முல்லைப்பாட்டு 95:504
மதுரைக்காஞ்சி. 55:210
பட்டினப்பாலை. 31:120–95:409
மலைபடுகடாம். 4:44–7:49–19:56–95:519, 520, 521
பரணர் 93:351
பரிமாணனார் 32:125–48:172–51:180
பல்காயம் 1:22, 24–95:411, 413
பல்காயனார் 1:18, 19, 24, 25, 27–7:50–8:53–10:58–13:67–15:70–23:98–27:110–29:115–32:124–36:132–37:144, 147–40:156–41:159–49:175–50:179–51:180–53:188-94:356–95:406, 407, 413
–மதம் 95:413
பனம்பாரனார் 29:118
பன்மணிமாலை 52:186–53:195
பன்னிருபடலம் 95:529, 530
–த்துப் பெருந்திணைப்படலச் சூத்திரம் 31:120
பாக்கனார் 95:504
பாடலனார் 95:405 (உரை)
பாட்டியலுடையார் 95:456
பாட்டியன்மரபு: 95:456

பாட்டியன்மரபுடையார் 93:378
பாரதம் 95:378
பிங்கலகேசி 3:40–95:487, 540
பிங்கலம் 93:351, 490, 456
பிறர்................
புட்காரனார் 93:352
புராணசாகரம் 62:238
புறநானூறு 1:19–15:76,–72:258,–94:358–95:414, 469
புறப்பொருள்வெண்பாமாலை 55:204
பூதத்தார்: 93:352
பெரியபம்மம் 1:32
பெருஞ்சித்திரனார் 93:351
பெருந்தலைச்சாத்தனார் 93:351
பெருந்தேவபாணி 83:297
பெருவல்லத்தைச்சொன்ன...........வெண்பா 62:238
பெருவளநல்லூர்ப் பாசண்டம் 95:461
பேராசிரியர் (மயேச்சுரர் ?). 8:53–27:110–32:125 ?–33:127–41:159 –51:180?–56:211?–68:250–69:254?–77:273–78:276?–79:278–82:285?–83:297–83:305–86:324–87:331–90:339–93:349, 350
பொய்கைத்தலையானைச்சூழாசிரியர் 95:505
பொய்கையார் 3:45–36:133–57:220–61:235 – 93:350, 352 – 95:460, 519
–நூல் 95:539
–கூற்று 57:222 (மேற்கோள் செய்யுளில்)
மந்திர நூல் 93:352
மயேச்சுவரர்: 10 : 58–13:68–15:71–16:82–19: 86–21;92–26:108–89;334–91;342–92;344–93;346
–மயேச்சுரர்; 3;45–7;50–32;125?–37:147–51:180?–56;211?–67 ; 247–69 ; 254–73:260–74 ; 262–75 ; 263–76;268–78:276?–82:285?–84;308–86:324, 325–95;417,418 –('பேராசிரியர்' பார்க்க)

மயேச்சுரர்காட்டும் பாட்டு: 93:347
—வடநூல்வழியரோ? 5:48
மாபிங்கலம்: 95:456,490
மாபுராணம்: 2:36–31:120–95:456,490
—உடையார்: 1:34–95:524
—(மேற்கோள் செய்யுளில்): 95:524
—(அவர் உதாரணம்:) 95:524
மாமூலர்: 93:351 ('மூலர்' பார்க்க)
மார்க்கண்டேயனுர் காஞ்சி: 95:378
மிச்சாகிருதி: 95:490?
முதுமொழிக்காஞ்சி: 19:86,–37:135–63:240
முத்தரையர்: ('தமிழ்முத்தரையர்கோவை'பார்க்க)
முத்தொள்ளாயிரம்: 57:217
மும்மணிக்கோவை 52:186–53:195
மூலர் 93:352 ('மாமூலர்')
யாப்பருங்கலக்காரிகை 76:273–92:343–95:486
—இந்நூலின் புறநடை 15:69
—இவ்வியாப்பருங்கலப் புறநடை (காரிகை) 59:227–68:250–85:311–86:329–89:339
யாப்பருங்கலவிருத்தி (இது சார்புநூலாகவின்): 23:98-25:106-34:129
யாப்பியல்உடையார் 95:456
—நூலுடையார் 95:458
லோகவிலாசனி 95:461
வடநூல்வழித் தமிழாசிரியர் ஒருசார் .... .... ....
வடுகச்சந்தம் 95:490
வளையாபதி 93:345
வள்ளுவன்பாட்டு 9:496 மேற்கோள் (மேற்கோள் செய்யுளில்)
வாசுதேவனுர் சந்தம் (சிந்தம்?) 95;539
வாஞ்சியார் 95:490
வாமரன்வழுதியார் 95:512
வாய்ப்பியம் 95:536
—உடையார் 55:208–90:340

வாய்ப்பியனார் 57:215–95:526, 527, 530
விளக்கத்தனார் 93:353
வெண்பாமாலை 95:530

## அரசர் முதலிய பெரியோர்.

அச்சுதன். 83:287–86:327
இளஞ்சாத்தன் 95:521
அழிசி 95:502
கதிக்கண்ணன் 15:74,–32:122
கரிகால் 76:267
கண்டரகண்டன் 95:511
கலிமல்லன் 95:494, 495
களந்தைவேந்தன் 95:496, 512
காடவர்கோன் 95:495
காளிங்கன் 76:271
குணபரன் 82:285–83:307
கூற்றப்போரசன் 84:301
கோசன் 95:501
சாத்தன் 95:521
சிங்கன் (கச்சி) 87:330
செம்பூட்சேய் (மேற்கோள் செய்யுளில்) 76:266–86:315, 322
திரையன் 3:45
தொண்டைமான் 94:360
தொண்டையார் 51:181
நந்தி 53:197–83:294–86:325, 327
நயதீரன் 95:508
நன்னன் 57:218
பல்லவமல்லன்; 95:496
வரகுணன்; 53:197

## ஊர் முதலியவை.

உறந்தை: 95:370

உறையூர்(ஊரெனப்படுவது): 1:19–(86:322)

கச்சி: 62:237–76:272–87:330–93:350,351–95:363,407

(கதிர்)காமம்: 37:139

சாம்போசனூர்: 57:221

குடந்தை: 95:360

கொல்லி: 95:360

கொற்கை: 95:360

கோட்டாறு: 95:501

தலையாலங்கானம்: 55:202

தில்லை: 76:271

தென்களந்தை: 95:512

பழையனூர்: (காரிநீலக்கண்ணன்): 95:402

பழையாறு 95:394, 395

புத்தூர் 60:232

பெருவல்லம் 62:238

மதுரை 83:286

கீழ்ப்பாக்கம்,
சென்னை.

திருச்சேறை குடிக்கந்தாடை,
கோ. ஆராவமுதன், M.A., B.L.

உ

# கம்பராமாயணக் கௌஸ்துபமணிமாலை.

K. N. சிவராஜபிள்ளை.

(29-ம் தொகுதியின் அ௬-ம் பக்கத்தொடர்ச்சி.)

[குறிப்பு:—கம்பர் அடிகளை வேற்றுமையின்றித் தரும்பொழுது அவற்றை (“ ” போன்ற இரட்டைத் தலைப்புள்ளி (Quotation marks) யுள்ளமைத்தும் சிறிது வேறுபாட்டோடு தரும்பொழுது (‘ ’) போன்ற ஒற்றைத் தலைப்புள்ளியுள்ளமைத்தும் இங்குக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.]

## உவமைப்பகுதி.

75 “ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கெ”னப்
பேச லாய உவமையுட் பேரெழில்
மூசத் தந்த கவித்திறம் முன்னுமின்.

76 “ஈர நீர்ப்படிந் திந்நிலத் தேசில
கார்க ளென்ன வருங்கரு மேதி”யென்
றேரொ டுத்த இசைப்பு ளிழைத்தனன்
ஊர டுத்தவோர் காட்சிக் கொருபடம்.

77 ‘கோல்பி டித்தகு ருடரொ டூக்குப்போல்
வால்பி டித்தொழு குங்கவி மாலை’யாம்
மால்ப டிந்தவு வமைஇ யற்கைமெய்ந்
நூல்ப டிந்தவ ரல்லர் நுவல்வரோ ?

78 ‘மீனொ ளித்தவான் முத்தினி டேந்தர்
தானொ ளித்தெ’னச் சாற்றுங் கவிநயம்
தேன ளித்தசெ ழுஞ்சொலின் சீரிய
ரான ளித்திட லன்றிமற் றுவதோ ?

79 ‘அரக்கி வன்குடர்க் கொண்ட வனுமனைக்
குரக்கு வாலிற் குயிற்றிக் குழுஞ்சிறூர்
பறக்க விட்ட கதலி’ யெனப்பயன்
சிறக்கச் சொற்ற திறக்கத் தகுவதோ ?

80 நிலம கள்முக மென்ன நிறுத்திடா
துலக வூழியு றையுள்வ ரைப்படி
பலக ணித்த வுருவகப் பந்திசெய்
புலவன் புந்தியோ ரந்தம் புணர்வதோ?

81 “இடைந்து போனவி ளைஞர்தம் சிந்தைபோல்
மடந்தை மார்பின் மருவின மஞ்ஞை”யென்
றடந்தை யாளன் உரைத்த உவமைநூற்
கடைந்து நோக்கினுங் காணக் கிடைப்பதோ?

82 ‘விண்ண வர்க்கு முனிசெயும் வேள்வியை
மண்ணைக் காத்துறை மன்னவன் மைந்தருங்
கண்ணைக் காக்குமி மையிற்காத் தா’ரென
எண்ணிக் கூறிய ஏற்றமுங் காண்பிரால்.

83 ‘எண்கின் கூட்டம் எறிந்தகி ரிக்குலம்
புண்ணி யம்பொருந் தாதமு யற்சிபோற்
சுண்ண நுண்பொடி யாகித் தொலைந்தெ’னத்
திண்ண றத்திறன் செப்பலுங் காண்பிரால்.

81 திங்க ளைக்கரி தென்னத் திருத்திய
சங்க வெண்சுதை தாங்கிய மாளிகைத்
தங்கு வெண்மை தழைப்புறப் பாற்கடற்
பொங்க லைக்குவெங் காலும் பொருத்தினன்.

85 ‘இடும்பை யெத்தனை யும்படுத் தெய்திலுங்
குடும்பந் தாங்குங் குடிப்பிறந் தாரினே
தடும்பல் வேலைது ளங்கிய தில்’லென
நெடும்பு கழ்ப்பெரி யார்நிலை கூறினன்.

86 'வஞ்சப் பூசையின் வாயின் மறுகுறும்
பஞ்ச ரக்கிளிப் பான்மை கதறலும்
தஞ்ச மாயதன் சேவற் பிடிபட
அஞ்சு மன்னத் தழுங்கலுந்' தந்தனன்.

87 'கருந்த டக்கணக் காரிகை காதலர்
பொருந்த வெண்ணிப் புகுந்தக டைசிநாள்
வருந்து நீர்நசை யால்வரு மானெ'னப்
பெருந்த டையிற்பே துற்றதும் பேசினன்.

88 'வானும் மண்ணுநீர் வற்றம றுகுறும்
மீனெ னமுகில் மேற்றுவள் மின்னெனக்
கான வேழங்கை விட்ட பிடி'யெனக்
கோனி ழந்தகொ டியைக்கு றித்தனன்.

89 'முன்பி ழைக்கவ றுமையில் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலெனு
வெம்பி யந்தியில் வீடடை தாயினை
அன்பில் வந்தணை யான்கன்று' போலெனு.

90 'ஊதை தாக்க ஒசியுங் கொடியெனு
ஊதி மூட்டிடா வூழியின் தீயெனு
ஓது மண்டத் துறைபமை வரயெ'னு
ஏதெல் லாம்பரி சென்னி யடுக்கினன்!

91 'பார்ப்பைச் சேக்கையிற் பார்க்கும் பறவையும்
பார்ப்பு னைகுழல் பார்க்குங் கணுடியும்
மார்ப்பு கக்கன்று வாராக் கறவையும்'
ஏர்ப்பு கத்தரு மெய்ப்பினன் வாய்ப்பரோ!

92 'புற்ற ராவென நெஞ்சுபு ழுங்கலும்
பற்று வெய்கைமுன் னூடு படுதலும்
செற்றயா னைக்காற் செல்லெனத் தீய்தலும்'
உற்றெ டுத்தவு வமைஒப் யாரமே,

### வேறு.

93 'புனைவா உயிர்வரு முலைவை பூத்தென
அனைவா நோக்குமாக் கன்றடைந்தெனக்
கனைகட லாழ்குநர் கலங்கண் டா'ரென
முனிவரர் மகிழ்ச்சியின் முன்னல் போற்றினன்.

94 "இழைபடப் பெடையொடு மெள்ளி நள்ளிகள்
புழைபடைத் தொதுங்க"விற் புனைந்த சித்திரம்
பழையவர் பண்பினர் பரிசி லாருளம்
உளைவர ஒளித்துறை உலோபர்க் காட்டுமே.

95 "கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலை
பல்விதச் சிறுவரிற் பகர்வ பல்லரி"
சொல்விதம் தமிழ்நடை தொடங்கும் பள்ளிகள்
புல்வித மிதுவெனப் பொறித்துக் காட்டுமே.

### வேறு.

96 'வெறுங்கை நாற்றிய விழுதுடை யாலன்ன மெய்யன்
மருங்கு செய்கொடு மரம்புகு மந்தியென் னனுமன்
கருவிக் கம்மியன் கூடத்தின் பொறியெனக் காய்வான்'
தருமி யற்கையைத் தழுவுமிவ் வுவமையோ பலவால்.

### வேறு.

97 'கோட்டிலை துறுபரமம்போற கொடிகளிற றனவே' யென்றும்
'தேரட்டியென் வேதத் தாலே தொடக்குமால் யானை' யென்றும்
'காட்டினை யெரிக்கக் கட்டை போற்கவி கரிந்த' வென்றும்
தீட்டுறு முவமை யெல்லாம் தேட்டுறு முவமை யாமே.

ஸ்ரீ:

# மதிப்புரை.

**கலைமகள்:—** இது, தமிழுலகிற் பலகலையுணர்வுகளும் வளர்வடையவேண்டி மாதப்பத்திரிகையாகச் சென்னை மயிலாப்பூர் லாஜர்னல் பிரஸ் ஆபீஸிலிருந்து ஸ்ரீமத். ஆர். நாராயணஸ்வாமிஐயரவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை பி. என். அப்புஸ்வாமிஐயர் முதலான பலகலையறிஞர்களான கனவான்கள் கௌரவபத்திரிகாசிரியர்களாயிருந்து நடத்திவருவார்களென்றுதெரிகிறது. தை மாசி வெளியீடான முதலிரண்டு பகுதியில் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் முதலான தமிழ்ப் பேரறிஞர்களாலும், ஆங்கிலகலாநிபுணர்களான தமிழறிஞர்களாலும் எழுதப்பட்ட பல அரிய பொருளுரைகள் வெளிவந்துள்ளன. அவையாவும் யாரும் படித்துணர்தற்குரிய தெளிவான தமிழ்நடையில் எழுதப்பெற்றுள்ளன. இத்தகைய பத்திரிகைகளே தமிழர்க்குப் பலகலையுணர்வுகளைப் பொதுவகையாற் றரத்தக்கன. இது, மாதந்தோறும் நல்லகாகிதத்தில் ராயல் அளவில் நூறுபக்கங்களில் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது. கலைப்பொருளுரைகள் நன்குவிளங்குதற்குரிய சித்திரப்படங்களும் இடையிடையே வேண்டுமளவு பதிக்கப்பெற்றுள்ளன. பொருளீட்டுதலையே நோக்காது பொதுமக்கட்கு அறிவூட்டுதலையே நோக்கி இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டுவாமுன்வந்திருக்கும் ஸ்ரீமத். ஆர். நாராயணசாமிஐயரவர்களது ஒப்புரவாண்மை பாராட்டத்தக்கது. இதன் வருஷசந்தா ரூ. 4. வெளிநாடுகளுக்கு ரூ. 5. தனிச்சஞ்சிகை அணா 6. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூர் லாஜர்னல் பிரஸ் மானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

**1931௵ டிசம்பர்௴ 23௳ (பிரஜோத்பத்தி௵ மார்கழி௴ 8௳) காலை 9மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.**

1. மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமது. ராஜா M. தினகர பகதூர் அவர்கள்—அக்கிராசனாதிபதி
2. „ S. சோமசுந்தரபாரதி அவர்கள், M.A., B.L.
3. „ V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார் அவர்கள், B.A., B.L.
4. „ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள், B.A., B.L.
5. „ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B A., B.L., M.L.C.
6. „ K. ராமையங்கார் அவர்கள், B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1931௵ ஏப்ரல்௴ முதல் நவம்பர்௴ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. 1931 — 1932ம் வருடத்துச் சங்கமாபீசு வரவு செலவு மதிப்புத்திட்டம் அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கமாபீசுக்குச் சமீபத்திலுள்ள மெஸானிக் லாட்ஜ் கட்டிடத்தை Current Depositல் இருக்கும் தொகையினின்றும் சங்கத்துக்காகக் கிரயத்துக்கு வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. சங்கத்துக்கு நன்கொடை அளிப்பதாக வாக்களித்தும் நன்கொடை அளித்தும் உள்ள கனவான்களுக்கு இச்சங்கத்தார் வந்தனமளிக்கிறார்கள்,

V. இராமநாதபுரம் ஸ்ரீமதி ராணி R. முத்தாத்தாள் நாச்சியார் அவர்கள், சங்கம்புத்தகசாலைக்காக அச்சுப்புத்தகங்களை அன்புகூர்ந்து இனாமாக அனுப்பி உதவியிருப்பதற்கு இச்சங்கத்தார் மிகவும் நன்றி பாராட்டுகிறார்கள்,

மதுரை,
23—12—1931.

M. Dinakara,
அக்கிராஸனாதிபதி

### மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம்௵ அக்டோபர்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1931 அக்டோபர் | வரவு 1930 அக்டோபர் | விவரம். | செலவு 1931 அக்டோபர் | செலவு 1930 அக்டோபர் |
|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | I GENERAL SECTION: | | |
| (1) மாதச்சந்தா வகையில் வரவு ... | 60 ... ... | | (1) சங்கம் மானேஜ்மெண்டா பீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 125 9 11 | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 625 ... .. | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 ... ... | |
| (3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ... | 28 ... ... | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது ... | 102 13 4 | |
| | | | (4) Stationery contingencies வகையிற்செலவு ... | 2 2 6 | |
| மொத்தம் ரூ ... | 713 ... ... | 813 2 ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ... | 14 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 116 | 3 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 130 | 3 | ... | 110 | 1 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) பாண்டியன் புத்தகசாலை உபயோகத்துக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தாசெல்லாக்கியது. ... | 7 | 2 | ... | | | |
| (6) தபால், தந்திவகையிற் செலவு | 1 | ... | ... | | | |
| (7) சரஸ்வதிபூஜை சம்பந்தமாகச் செலவு ... | 12 | 2 | 9 | | | |
| மொத்தம் ரூ ... | 377 | 14 | 6 | 451 | 3 | 2 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 29 | 2 | 8 | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ... | ... | 3 | ... | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **III PRESS SECTION:** | | | | | |
| (1) அச்சுக்கூலி வகையில் வரவு ... | 112 | 12 | ... | | |
| (2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ... | 17 | 8 | ... | | |
| (3) பைண்டிங்கூலி வகையில் வரவு ... | 50 | 14 | ... | | |
| மொத்தம் ரூ ... | 181 | 2 | ... | 182 | 6 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) ஷை புத்தகங்கள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலி வகையிற் செலவு. ... | 74 | 8 | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவானது. ... | 15 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 118 | 13 | 8 | 203 | 7 | ... |
| **III PRESS SECTION:** | | | | | | |
| (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 106 | 12 | 2 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 15 | 13 | 7 | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது | 32 | 1 | 4 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு | 12 | 10 | 6 | | | |
| மொத்தம் ரூ ... | 167 | 5 | 7 | 178 | 3 | 10 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 1024 | 5 | ... | 1105 | 9 | ... |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ... | 15802 | 3 | 10 | 9247 | 2 | 8 |
| ஆகமொத்தம் ரூ ... | 16826 | 8 | 10 | 10352 | 11 | 8 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆக மொத்தம் செலவு ரூ ... | 664 | 1 | 9 | 832 | 14 | ... |
| மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ... | *16162 | 7 | 1 | 9519 | 13 | 8 |
| ஆகமொத்தம் ரூ ... | 16826 | 8 | 10 | 10352 | 11 | 8 |

*By M. U. C. C. S.
Pass Book Rs. 5000– 0– 0

M. R. C. C. Bank
Pass Book Rs. 10506–15– 8

Cash on hand Rs. 655– 7– 5

16162– 7– 1

*Audited and found correct,*
V. S. RAMASWAMI,
AUDITOR,
6—11—31.

LAKSHMINARAYANAN,
*Manager*,
MADURA TAMIL SANGAM.
3—11—1931.

உ

# மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம் ௵ நவம்பர்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1931 நவம்பர் | | | வரவு 1930 நவம்பர் | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section : | | | | | | |
| (1) நன்கொடைவகையில் வரவு. | 24 | 13 | ... | | | |
| (2) மாதச்சந்தாவகையில் வரவு... | 60 | ... | ... | | | |
| (3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு | 1 | ... | ... | | | |
| (4) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகைவரவு ... | 28 | ... | ... | | | |
| (5) **Miscellaneous** வரவு ... | 3 | 5 | 6 | | | |
| மொத்தம் ரூ ... | 117 | 2 | 6 | 50 | ... | ... |

| விவரம் | செலவு 1931 நவம்பர் | | | செலவு 1930 நவம்பர் | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section : | | | | | | |
| (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 107 | 11 | 10 | | | |
| (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 138 | 10 | 10 | | | |
| (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 2 | 9 | 3 | | | |
| (5) பாண்டியன் புத்தகசாலை உபயோகத்துக்குப் புத்தகம் வாங்கியவகையிற் செலவு. ... | 1 | 7 | ... | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆக மொத்தம் செலவு ரூ ... | 664 | 1 | 9 | 832 | 14 | ... |
| | | | | | | | மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ... | *16162 | 7 | 1 | 9519 | 13 | 8 |
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 1024 | 5 | ... | 1105 | 9 | ... | | | | | | | |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ... | 15802 | 3 | 10 | 9247 | 2 | 8 | ஆகமொத்தம் ரூ ... | 16826 | 8 | 10 | 10352 | 11 | 8 |
| ஆகமொத்தம் ரூ ... | 16826 | 8 | 10 | 10352 | 11 | 8 | *By M. U. C. C. S. Pass Book Rs. 5000- 0- 0<br>M. R. C. C. Bank Pass Book Rs. 10506-15- 8<br>Cash on hand Rs. 655- 7- 5<br>16162- 7- 1 | | | | | | |

*Audited and found correct,*

V. S. RAMASWAMI,

AUDITOR,

6—11—31.

LAKSHMINARAYANAN,

*Manager,*

MADURA TAMIL SANGAM.

3—11—1931.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1931-ம் வருஷ நவம்பர்மாத வரவு செலவு கணக்கு.

**வரவு**

| விவரம் | 1931 நவம்பர் | | | 1930 நவம்பர் | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | |
| (1) நன்கொடைவகையில் வரவு. | 24 | 13 | ... | | | |
| (2) மாதச்சந்தாவகையில் வரவு... | 60 | ... | ... | | | |
| (3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக்கட்டணத்தொகை வரவு | 1 | ... | ... | | | |
| (4) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகைவரவு ... | 28 | ... | ... | | | |
| (5) Miscellaneous வரவு ... | 3 | 5 | 6 | | | |
| மொத்தம் ரூ ... | 117 | 2 | 6 | 50 | ... | ... |

**செலவு**

| விவரம் | 1931 நவம்பர் | | | 1930 நவம்பர் | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | |
| (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 107 | 11 | 10 | | | |
| (2) சங்கக் கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 138 | 10 | 10 | | | |
| (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 2 | 9 | 3 | | | |
| (5) பாண்டியன் புத்தகசாலை உபயோகத்துக்குப் புத்தகம் வாங்கியவகையிற் செலவு. ... | 1 | 7 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| II EDITORIAL SECTION : | | | | | | |
| (1) 'செந்தமிழ்'ப் பத்திரிகைக்குச் சந்தாவகையில்வரவு ... | 7 | 14 | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 130 | 15 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 138 | 13 | ... | 234 | 12 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (6) தபால், தந்திவகையிற்செலவு | ... | 2 | 3 | | | |
| (7) முனிசிபாலிடிக்கு வரி செலுத்திய வகையிற் செலவு ... | 53 | 1 | 7 | | | |
| (8) Miscellaneous செலவு... | 2 | ... | ... | | | |
| மொத்தம் ரூ | 432 | 10 | 9 | 428 | 3 | 2 |
| II EDITORIAL SECTION: | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 35 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ... | 3 | ... | 6 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 118 | 10 | ... | | | |
| (4) தபால் தந்திவகையிற் செலவு | 15 | 12 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 172 | 6 | 6 | 376 | 13 | ... |

| III Press Section: | Rs. | As. | Ps. | Rs. | As. | Ps. |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 82 | 12 | ... | | | |
| (2) ஷை அச்சுவேலைகட்காக வாங்கிய காகிதங்கட்குக் கிரையம் வரவு ... | 10 | 13 | ... | | | |
| (3) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 65 | 4 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 158 | 13 | ... | 174 | 8 | ... |

| III Press Section: | Rs. | As. | Ps. | Rs. | As. | Ps. |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 100 | 1 | 5 | | | |
| (2) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 16 | 11 | 6 | | | |
| (3) பைண்டிங் ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது .. | 29 | 9 | 10 | | | |
| (4) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 2 | 1 | 6 | | | |
| (5) அச்சாபீஸ் தொழில்வரி செல்லாக்கியது. ... | 9 | ... | ... | | | |
| மொத்தம் ரூ. ... | 157 | 8 | 3 | 197 | ... | 8 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 414 | 12 | 6 | 459 | 4 | ... | ஆக மொத்தம் செலவு ரூ. | 762 | 9 | 6 | 1002 | ... | 10 |
| | | | | | | | மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ரூ. ... | *15814 | 10 | 1 | 8977 | ... | 10 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ... | 16162 | 7 | 1 | 9519 | 13 | 8 | | | | | | | |
| ஆகமொத்தம் ரூ. ... | 16577 | 3 | 7 | 9979 | 1 | 8 | ஆக மொத்தம் ரூ. ... | 16577 | 3 | 7 | 9979 | 1 | 8 |

*By M. U. C. C. S.
Pass Bk. Rs. 5000- 0- 0
M.R.C.C. Bank
Pass Bk. Rs. 10556-15- 8
Cash on hand Rs. 257-10- 5
15814-10- 1

*Audited and found correct.*

**V. S. RAMASWAMI,**
AUDITOR.
19—12—1931.

**LAKSHMINARAYANAN,**
*Manager,*
MADURA TAMIL SANGAM.
5—12—1931.

90 காலுகளக் கடைகுழையும் பைங்கூழிற் களைகளையுங்
கடைசி மார்வை
வேலுகளு மதர்நெடுங்கட் கிணைகுன்றி யினத்தோடும்
வெருவி யேசெஞ்
சேலுகளக் கருங்குவளை யுடைந்துகளுந் தெண்ணறவஞ்
செறுவி னுப்பண்
சாலுகளப் புழைச்செங்கா லனப்பேடை பார்ப்பருத்துந்
தலைமைத் தாமே. (எ0)

91 பள்ளவாய்ச் சுரிசங்கங் கருமேதிக் கவடுபடு
பணைத்தா ளொற்று
வெள்ளவாய்ச் சூலகடு நெக்குக்க நித்திலமும்
வேழ முத்துங்
கள்ளாருக் கொழுங்குவளைக் களை[1]கடிந்த கடைசியரைக்
கணித்துக் கொற்றுக்
கள்ளலாட் டியதுழனிச் செறுவுழுநர் முகவைமுகந்
தளப்ப ரன்றே. (எக)

92 அறத்தின்வழி வழுக்காது வளையாச்செங் கோலோச்சி
யதுபோற் பின்னு
மறத்தின்வழி வழுக்காது செறுநரைத்தேய்த் தருள்பொழியு
மன்னன் கோயிற்
புறத்துளுழுக் குடிபோல வசைதீரத் தழைந்துபொதிப்
புறஞ்சார் மூன்று
திறத்தின்வகைப் பைங்கூழ்ந் திங்கடோறும் புயல்பொழியச்
சிறந்த மன்னோ. (எஉ)

93 சதிருடையுத் தமப்புனித ரடித்துகள்பொன் முடிபொறுத்த
தக்கா ரெய்து
மதிநலனுட் செறிந்தவருண் முதல்வனெனக் குறுந்திவலை
மாரி வாய்ப்பப்
பொதியவிழ்ந்து பாசடைகள் புறங்கான்ற தலைநிமிர்பூ
மூகத்த வாகுங்
கதிரினுட்டிவ் வியநறுந்தீம் பால்பார்ந்து முழுமணியாய்க்
காய்த்த மாதோ. (எங)

---

[பி-ம்.] [1]தடிந்த. சா.

94 *சிலைவணக்குந் திருநுதலார் சிற்றிடையை வணக்கியுவச்
சிறுமை நோக்கி
முலைவணக்கஞ் செய்ததுபோன் முதுக்குறைவந் தடைந்துபொறை
முதிர நோன்று
ணிலைவணக்கங் கொண்டது கண் டுன்றதாய் சுமந்திறுத
னெறித்தன் றென்றே
தலைவணக்கங் கொண்டுகதிர் நிலமகட்கே சரணமெனச்
சாய்ந்த [1]தன்றே. (எச)

95 †படியின்மேற் படிந்தகதிர்த் தலையினிற்றேங் கமலமெதிர்
பயின்று பைந்தேன்
கடியுண்மரண் கமலமினக் கதிர்த்தலைமே லுடன்கிடந்த
காட்சி மாத
ரடியுமா கமுந்தழுவக் கொழுநரொடுங் கலந்தணைமே
லனந்த ராய
முடிவின்வே ரரும்புமுக முகத்து றவைத் துடன்றுயிலு
முறையே போலும்.[2] (எரு)

96 மடக்குதிரைக் கடலகடு பொருவருதண் கழனியினை
வணங்கி விற்போன்
முடக்குமுது குடக்கருண வெயின்மறைக்க முடிந்ததுகின்
முடியின் மள்ள
ரிடக்கைகொடு வளைத்தரியக் கனத்தகதிர்க் கற்றையிரும்
புற்ற மற்றத்
தடக்கையொடு மெடுத்துவிரித் திடுபுகடை வரம்புதலை
யெடுத்தா ரன்றே. (எசு)

---

[ஸ்ரீ-ம்.] [1]மன்னே. மா. [2]படியின்மேற் படிந்தகதிர்ப் படைமீது இளர்களை யாம் பணிவண் டாடிக், கடியுணீ லமுநறுமென் கமலமுஞ்சாய்ந் துடன்கிடந்த காட்சி கூறி, னடியுமா கமுந்தழுவிக் கொழுநரொடுங் கலவியினி லமுந்தி யோர்தம், முடியுமே தகவுடைநன் முகத்துறவைத் துடன்றுயிலு முறையே போலும், பூர,

97 †நிறந்தழைவான் கதிருணங்க [1]வங்குரித்தாங் குடன்வளர்ந்த
நீர்மைத் தாகுந்
திறந்தழைசெங் கமலமுமிந் தீவாமு முடனுணங்குஞ்
செயலுந் தீந்தேன்
[2]வறந்தறவண் டினந்துறந்த செய்கையுநீ ரவ[3]ருறவும்
வாழ்வில் காலத்
தறந்தவறிப் புறந்தருந ருறவினிழி வையுந்தெருட்டு
மளவைத் தாமே. (எஎ)

98 மடற்போந்தி னிளம்பாளை முதுநறவை வடித்துமடல்
வாக்கு மாதர்
கடற்போந்து முகிற்கணமாண் புனலருந்து மாறெனவே
கருங்கை மள்ளர்க்
குடற்போந்து புடைவீங்க வருத்தியபின் சேடமுகந்
துண்டு தத்தங்
குடற்போந்து பூரிப்ப வரம்பணைச்சார் குழந்தைமுலை
கொடுத்திட் டாரே. (எஅ)

99 மைக்கருங்கட் கடைசியர்தாங் தனக்குவடு சுமந்துமருங்
கேக வாசைக்
கைக்களிற்றின் பிடர்பொருத்த திகிரிநெடுங் கிரியெனவே
கருங்கை மள்ளர்
தக்கதலைச் சுமையாக்கி மதியகடு தொடவிரைந்து
தளரா தேகித்
தொக்ககதிர்ப் படைகளங்கொண் டீண்டியபின் போரிணையுந்
தொடுத்தா ரன்றே. (எகூ)

100 மதியகடு தொடுகுடுமிப் போரழித்துக் கொழித்தெடுத்து
வளர்நெற் குன்றை
யதிசயித்து மதிகொடுநின் றளப்பதல்லா லளக்கவரி
தாய பின்னர்க்

---

[பி-ம்.] [1]வங்குரித்தங். [2]வறந்தா. [3]ருறவின் மாண்புங் கள்ளுண், டறந்தவறித் திரிகளிய ருறவினிழி வையுமுணர்த்து மமைதித் தாமே. பா.

கதியினுக்கில் லறமோம்பி வறியவர்கட் கார்த்திபிடக்
கருதித் தங்கள்
பதியினிற்குஞ் சரப்பிடரிற் புணர்ப்பொறையாய் நிறைத்தழகிற்
படர்ந்தா ரன்றே. (அ0)

வேறு.

101 கடலை யெட்பய றுழுந்துசெந் தினைகருந் தினைதங்
கடலை யிற்கட கப்பொறை புரிநர்கா லனுமேங்
கடலை யுற்றவன் பகட்டினிற் புணர்ப்பொறை களிற்றெண்
கடலை யுற்றவோ சையினெழு நருங்கணக் கிலரே. (அக)

102 காண மாண்கதிர் வாருகோ தும்பைசா மைகள்கண்
காண நன்குடைக் கதிர்மணி யிறுங்குவை கலுங்கைக்
காண மீந்துகோ டலிற்கரு ணையினறம் புரிதற்
காண மேயின ருறைநகர்க் கெழுநர்பல் கணமே. (அஉ)

103 துளவ மல்லிகை வகுளமென் சுரும்புபேட் டொடுஞ்சூழ்ந்
துளவ சந்தமென் குவளைகள் சுலவுபொய் கையிடத்
துளவ லங்கலர் கமலநன் கயல்வெரீஇத் துறையிற்
றுளவ மைந்துகொண் டெழுநர்தந் தொகைதொகை யிலவே. ()

வேறு.

104 மாவும்வா ழையும்பலவு நாளிகே ரமுங்கமுகு
மருத வைப்பிற்
காவுபா ரித்தவள னெனத்தருகாய் கனியினொடுங்
கரும்பும் வேலைத்
தீவின்மே தருவளனு மெல்லிலையு மிருதலைக்காச்
சிறந்த பாரத்
தேவல்பூண் டகநகர்க்கொண் டெழுகுநருந் திசைகடொறு
மெண்ணில் கோடி. (அச)

105 சந்தனமுங் காழகிலுஞ் சண்பகத்தின் வனமுகையுஞ்
சாதிக் காயுங்
கொந்தவிழ்கப் புரமுமில வங்கமுமே லமுமுறுதக்
கோல மோடு

மைந்தருமா தருமகிழ்ந்த வரிசனமுந் திரிபலமும்
வாச நீடு
சுந்தரமே வியவிருவே வியுமுதலி யனகொடுபோந்
தொகுதி கோடி. (அரு)

106 மேலவா னகடுரிஞ்சும் பழுமரக்காத் தொறுங்குழுமி
விரைந்தெஞ் ஞான்றுங்
கோலமே [1]மிகுவளங்கள் கொளத்தருவோர் கொளத்துணிந்துங்
குறையா நீதி
ஞாலமீ தினிற்படைத்த வுத்தமர்கைப் பொருள்புரக்க
நாளு நாளுஞ்
சாலவே தமைப்படைத்த குடிதழைக்கத் தழைதருமத்
தன்மை மானும். (அசு)

107 ஆதுலர்க்கொன் றீயாது காப்பவர்சே மித்தபொரு
ளவர்நின் றேங்க
வேதிலர்கைக் கொண்டதுபோன் றீக்கணநின் றேக்கறச்சென்
றெடுத்த தீந்தேன்
போதுதொறுங் கன்றருத்திக் கபிலைகுடந் தொறுநிறைத்த
புதிய தீம்பான்
மேதியின்வெண் டயிர்நறுநெய் பஞ்சதா ரையிற்கொடுபோம்
விலைஞர் கோடி. (அஎ)

## வேறு.

108 உளங்கொள் வேனில்வந் திறுத்தலு மாங்குயி லுயர்வாவித்
தளங்கொள் காலையிற் பொதும்பருட் புகுந்துசண் பகப்போங்கர்க்
களங்க வான்பிறை யுழுதுஞ்சும் பூநறுக் காரென்றே
விளங்கு மாமயில் சிறைவிரித் தாடுவ வெளிவந்தே. (அஅ)

109 பூமன் வாகனக் குலத்திரள் கடம்பினிற் பொலிபொற்பூந்
தாமன் வாகனக் குலத்திரள் கரும்பினைத் தனுவாக்குங்
காமன் வாகனத் திரளரி கரியெனல் கலைகற்றோர்
சேம ஞான வெனநிகழ்த் தொலிதிசை திசையெங்கும். (அகூ)

---

[ஓ-ம்.] [1]தகு. சா.

110 பக்க வாவியுண் மேய்ந்து று பசிகெடப் படர்காரா
னுக்க தாவிரைத் தொழுகுபா லாற்றின்மூழ் குதலானு
மக்கண் மெய்யினைத் தீண்டலு மக்களைப் பெறுகற்றாய்
மெய்க்கு மின்பமென் பதனையே விலங்குமெய்ம் மையதாக்கும். ()

வேறு.

111 ஒழுக்கியன்ற விளையார்க ளரிதாளி னொடிவின்றி
யுழுத வொண்பொற்
கொழுத்தலையிற் கொழுங்காவி மணநாறுங் கழனிவளங்
கூறிப் பின்னும்
விழுத்தவங்கூர்ந் தனராயைம் புலனவித்த வுரனுடையோர்
விருப்பி னொடி
வழுத்தியெழும் புனற்பொருநைச் சங்கணிதண் டுறைவளமேல்
வாழ்த்த லுற்றேன். (கக)

112 வங்கவா ரிதிக்கிடங்கி னாதனன் மனுகுலத்தின்
வழுக்கிப் போந்து
சங்கமாம் வடிவெடுத்த சங்கமா கியமுனிவன்
சங்க மேந்துஞ்
செங்கண்மா [1]லிணையடிக்கீழ்ச் சேர்கதிக்கா யிரமெனலாந்
தேவ ராண்டித்
துங்கவான் றுறைபடிந்தங் கழியாத வீட்டின்பந்
துய்த்த தோன்றே. (கஉ)

113 நெடுஞ்செவிநேர் நிறுத்துபகு வாய்ஞமலி நீந்தியுட
னீங்கி விண்போய்
விடுஞ்சுடரா ழியுஞ்சங்கு மிருதோளி னிருமருங்கு
மிளிரக் கண்டே
தொடுஞ்சலதி யெனவுகளித் தெழுமுவகை புரிந்தமரர்
துதிக்கு மாற்றாற்
கொடுஞ்சினமற் [2]றொடுங்குகரு வூரனையுங் கும்பிடு
கொண்ட தாமே. (கங)

[பி-ம்,] [1]லடியிணைக்கீழ்ச். சா. [2]றொருங்குகரு. சா.

114 பூமாது கொழுநனடி யினிற்பிறந்த பகிரதிவான்
பொன்னி கன்னி
மாமாகந் தனுக்கோடி முதலியயா வையுமலய
மகளா மென்னத்
தாமாதி யினிற்குழுமு தகைத்தெனலாற் சங்கனுறு
தவத்தி னாலும்
பாமாலை புனைந்திமையோர் முதல்சங்க தீர்த்தமெனும்
பான்மைத் தாமே. (கச)

115 கொல்லாத விரதமெனக் குறித்ததுவே விழுமியவாய்க்
குறிக்கொ ணீர்மை
யெல்லாநல் லறத்தினையு மகத்தடக்கிக் கொள்கலமென்
றினிய கேள்வி
நல்லார்நற் பனுவன்முழு தளைந்துணர்ந்து மாசறுமெய்ஞ்
ஞானம் போலச்
சொல்லாடத் தருதெளிவு மினிமையுமீ ரமுமுறுதண்
டுறைய தாமே, (கரு)

வேறு.

116 தெரிசிப் பதற்கு வெளிதாகித் தேம்பூ வாசந்
தெகிழ்ந்தனவாய்ப்
பரிசித் திடத்தண் டமிழெனலாம் படிதண் மையுமென்
மையும்பயின் றுண்
டுசிசிப் பதற்கு மினிமைபதா யுயர்வீ டளித்தொல்
லெனுமொலித்தால்
வரிசைப் புகழ்ச்சங் கணித்துறைத்தெள் ளமிர்தே யமிர்தா
வதுமன்னே (கசு)

வேறு.

117 தொன்று தோய்மறை யொழிவறக் கூறிய துறைதோறு
நன்று காண்குநர் மன்னுயி ரழுக்கையு நனிதீர்க்கு
மென்று நாடவி னுடுமெத் துறையினை யிழிந்தோருஞ்
சென்று காணினும் விரசைமேற் கொள்வதுந் திடனுமே. (கஎ)

118 புவிக்கெ லாமொரு திலகமென் றிமையவர் புகழ்ந்தேகை
குவிக்கு மாநகர்த் துறைபடிந் தவர்கள்சிற் குணவாழ்வை
யவிப்ப வரம்புல னைந்தவித் தவர்புகழ் வதைநாடிச்
செவிக்கொள் வாரையும் விரசைமேற் கொள்வதுந் திடனுமே.

119 துவலை மேற்கொளும் பாற்கடற் றுயின்முதற் சுடர்தோயாச்
சவலை மேற்கொளு மிருள்செறி மனத்தின்வஞ் சகராகிக்
கவலை மேற்கொளும் படிற்றொழுக் கினருமக் கரைசார்ந்தோர்
திவலை மேற்கொளின் விரசைமேற் கொள்வதுந் திடனுமே. ()

120 பூவின் மேற்கொளுந் திருமகள் கலந்தமெய்ப் பொருளுமம்
நாவின் மேற்கொளு நாவலர் நால்வகைத் தெனலாகும்
பாவின் மேற்கொளச் சங்கணித் துறையெனப் பகர்ந்தாலத்
தேவு மேற்கொளும் விரசைமேற் கொள்வதுந் திடனுமே. (௪௦௦)

121 ஆளி மேற்கொளு முகத்தினு னதிநறை யளித்தோங்குந்
தாளின் மேற்படு தலைமையார் படிந்ததண் டுறைநீர்ப்பூந்
தூளி மேற்கொளுந் தொகைவிரை யுயிர்த்ததொண் டரையேபுத்
தேளிர் மேற்கொளும் விரசைமேற் கொள்வதுந் திடனுமே. ()

122 உரைத்த காலையி னுடல்பதைத் துயிர்துனுக் குறுமூன்றாய்
நிரைத்த தீவினை பிறந்திறந் துழல்வுழி நிறைத்தோரு
நரைத்த நாளையி னொருகணத் ததனிடை நயந்தாடிற்
றிரைத்தெ ழுந்திரை விரசைமேற் கொள்வதுந் திடனுமே. ()

வேறு.

123 எப்புலத்தெக் குலத்தெவரே யானுலு மிழிந்ததிணை
யினவென் றுனு
மப்புலத்துற் றதனகத்தா டினவுயிர்கட் கும்மையினுண்
டாய பாவ
மெய்ப்புலத்துற் றிடுமாசி னுடன்கொடுபோய்த் தினங்கவிழ்ப்ப
வியன்ஞா லஞ்சூ
ழுப்புடைவெண் டிரைக்கடலுங் கருங்கடலா யினதென்று
னுரைப்ப தென்னே. (௪௦௫)

124 செகமலர்ந்த காத்திரனொடு மிரப்பெனுமுன் புரப்பதுவே
திடனுஞ் செய்கைச்
சுகமடைந்தோர் களினொருவர் தமையும்வரைந் தறியாத
தொடர்பி னோடு
முகமலர்ந்தின் புறநோக்கி யினியவையே மொழிவதின்மூண்
டகங்கட் காவி
யகமலர்ந்து சேதாம்பன் மிகமலர்ந்தொல் லெனுமொலிகற்
றமைவ தாமே. (௧0௪)

வேறு.

125 அன்னந் தடந்தா மரைப்பொருட்டி
னருகே வளர்செண் பகச்சினைப்பூம்
பொன்னந் துகளுக் கதிற்படிவம்
பொற்கென் றனவாய்த் தவளமலர்
முன்னங் கெதிர்பேட் டொடுக்கறங்கன்
முகனுன் கினனோர் முகனாகித்
தன்னன் புறவத் துறைவளந்தன்
றையற் குணர்த்துந் தகைமானும். (௧0௫)

126 புள்ளிப் பொறியொ ராயிரங்கண்
புணர்புட் புளினந் தணந்தொளிர்பொன்
வள்ளித் துறைநீர் படிந்தெழுந்து
வான்காண் குபுகுட் டினைவணக்கல்
வெள்ளிப் பகட்டொ ராயிரங்கண்
வேந்தன் றனதாற் றினைப்புனலாழ்ந்
தெள்ளிப் புவன விரசையதா
மிஃதென் றிறைஞ்சுந் திறம்போலும். (௧0௬)

வேறு.

127 கூன்புரக்குங் குழவிமதிப் பிளவனைய நுதற்பனுவற்
கோதை நீங்காக்
கான்புரக்கும் புண்டரிகப் பொருட்டுதித்த திசைமுகனுங்
கற்பத் தோனும்

வான்புரக்கும் பகட்டயிரா வதத்தோனுந் தமதுரிமை
வழுக்கா தென்றுந்
தான்புரக்கும் படிபடிந்து வைகலுமெய்த் தவந்தொடங்குந்
தன்மைத் தாமே. (௧௦௭)

128 சிலைமாது முமாகேசன் கணபணு டவியுலகிற்
றிளைத்த கீர்த்தி
நிலைமாதும் வெண்டோட்டு விரைக்கமலப் பொகுட்டுறையு
நிறைதோ யெண்ணெண்
கலைமாது முணர்வுருக மாடகயா ழிசைபயிலுங்
காமர் பொற்பூண்
முலைமாதும் புனிதமுறப் புனன்மூழ்கி யரியதவ
முயல்வ தொன்றே. (௧௦௮)

129 களிகாவி யங்கருங்கட் டிருமாது மணிமார்பிற்
கவினு மென்மைத்
தெளிகாவி நிறந்தழைந்த திருமேனிப் பரனடிக்கீழ்த்
தினமுந் தீந்தேன்
றுளிகாவின் மலர்தூய வடியவர்கட் கடியவராந்
தொண்ட ராடைக்
குளிர்காவி மணத்தினொடுங் கொழுங்காவி மணங்கமழுங்
குணத்த தாமே. (௧௦௯)

130 ஒழியாத நரைமூப்புப் பிணியொழித்து வேண்டுருவ
மொருவர்க் கீந்து
கழியாத பேரின்பக் கடல்காட்டுந் தென்றிசையிற்
கங்கை யாகத்
தழியாத சங்கணிதண் டுறையிருப்பப் பொறிவயினைர்
தடக்கி யொன்று
மொழியாமல் விழியாழற் றவத்துறையாற் பெறலெவனோ
முனிவர் தாமே. (௧௧௦)

வேறு.

131 காரா யிணங்கு திருமேனிக் கருணா கரன்பொற்
கழல்வழுத்திப்
போரா யணங்கு செய்யும்வினையைப் பொடிசெய் புனிதப்
பொறையுடையோர்

நாரா யணனே நமவென்றே நன்னீ ராடும்
 பொருளுரையைப்
பாரா யணஞ்செய் தனம்பெடைக்குப் படிப்பித் திருக்கும்
 படித்தாமே. (கக௧)

132 சொல்வித் தகநான் மறையிறைமேற்
 றெடுத்த பெயராற் றிரண்டினையும்
பல்வித் தகப்புட் பேடையுடன்
 பார்ப்புக் குரைக்கும் படினமதா
னல்வித் தகரை வகைப்பனுவ
 லுற்பா டலின்மூன் றெனுமுறுதிக்
கல்வித் துறைதோய் கழகமெனக்
 கவினுந் திருச்சங் கணித்துறையே. (கக௨)

133 கிள்ளைக் குலந்தீ வினுட்புறவிற்
 கிளர்பூ வைகண்முன் கையில்வளர்த்த
வள்ளைக் குழையார் புனல்படிய
 வருபோ தடன்வந் தனவாகிப்
பள்ளத் தடஞ்சேர் குடம்பையினுட்
 பார்ப்பி னெதிர்தே வகிபயந்த
பிள்ளைப் பெருமான் பெயர்மிழற்றும்
 பிரிவா ரெவரத் துறையினையே. (கக௩)

134 பன்னற் பனுவ லினைத்தெரிந்தே
 பரனைத் தெரிசித் தருள்பெரியோர்
றென்னற் புனைந்த நுதற்றிருமண்
 ணிறைநீ ராடக் கரைந்ததனு
லன்னப் பெடைசே வலைத்தழுவி
 யளிபாண் பயிலத் துயிலாக்கார்
சொன்னக் கமல முதலியவெண்
 சுடர்வெள் ளணிதோய்ந் துளதொன்றே. (கக௪)

135 ¹கண்ணுக் கினிதாய்த் ததியர்நுதல்
கவினப் பொறித்த திருமணிடை
வண்ணத் தவிசாய் மலர்மகட்கு
வனப்பி னமைத்த தெனத்தகைசால்
சுண்ணத் திரண்மஞ் சனமாடத்
தொளிகூர்ந் துளதா லிருமையினு
மெண்ணிற் பொறிசே ரரிசனத்தா
லிசைதண் டுறையா யினமன்னே. (ககரு)

வேறு.

136 *விரைக்கமல முறுக்குடைந்த தகட்டகட்டி னடுப்பொகுட்டு
வெண்டோட் டும்பர்
நிரைக்கமலத் ²தினிதுறையுஞ் சூட்டெகினம் பார்ப்பருத்த
³நினைந்து நீர்வா
யிரைக்கெழுவே செங்கால்வெள் ளுகிருறமு னிதழுரிஞ்சி
யிழிந்த தீந்தே
னரைக்குடுமி மறைக்கிழவ னெருப்பிடைநெய் யுகுப்பனபோ
லுன்ற மாதோ. (ககசு)

137 செக்கர்வான் மதிபொடிப்பக் குமுதம்வெடித் துச்சிரித்த
தெனவுங் கஞ்ச
மொக்கரீ டிதழ்குவித்தல் கதிர்வரச்செங் கரங்குவித்த
வுவப்பா மென்றுந்
தக்கமா மனத்தினினைந் தயற்பொதும்பர்ப் பிரிந்தபெடைத்
தனிமை நோக்கிப்
பக்கமே விரைந்திரைதேர்ந் தனந்தனது சேக்கைக்குப்
படர்ந்த தன்றே. (ககஎ)

138 *மேலைமலைக் கதிர்மறையக் குவிமரையுட் டேனசையான்
மீளா வைகிச்
சோலையில்வண் டினந்திறப்ப வயற்கமழ்நீ ரிடந்தோய்ந்த
சுரும்பு மாதோ

[பி-ம்.] ¹கண்ணற். சா. ²தினிதிருந்து. மா. ³நினைத்து. மா.

மாலையிற்றன் மனைபுகுது மணமகனை விறலியொடு
மதங்கன் பாடிக்
காலையினிற் றுயிலெழுப்பக் கடைதிறந்து [1]பரத்தையிற்சார்
காட்சி மாணும். (ககஅ)

139 அளிமுகந்து தாதுதிரைத் தருந்துகம லாசனத்து
ளாரா வின்பக்
களிமுகந்தாங் கமிர்தநிலை கரையழிகா லையிற்பெடையக்
கமலப் பூந்தேன்
றுளிமுகந்து முழுதுடலந் தோய்ந்திடத்தோய்ந் திடுமெகினத்
துணைமூ தண்ட
வெளிமுகந்த மலயமந்தா நிலந்தன்மெய் யினைப்புலர்த்தும்
விருப்பிற் றன்றே. (கக௯)

140 தூவியன நடைமடவார் காலையினிற் புனலாடத்
தொகுதி யோடும்
வாவியின்வாய்க் குறுகுதலு மதர்விழிபோற் றிருமுகம்போன்
மலர்ந்த காமர்
காவியுமென் கமலமுமொப் புமைநிரம்பா மையிற்கலுழுங்
கண்ணீர் போன்றப்
பூவுகுதே னருந்தியுகள் கயல்புனலுண் மறையுமதி
புயன்மேன் மன்னே. (க௨௦)

141 நிழற்காலு மழைசுருட்டி முடித்தனைய வைவகையாய்
நியதி போற்றுங்
குழற்காடு புனன்மூழ்க மடமாத ரவிழ்ப்பமுல்லைக்
கொழுமென் போது
தழற்காலு மரைமலரா சனத்திவரா வளிதொடருந்
தன்மை யொண்பொற்
கழற்காலி னிருங்குமரர் பொற்கலத்துண் பாலடிசிற்
கவினே போலும். (க௨க)

---

[பி-ம்.] [1]பரத்தையிற்போ யகாட் சித்தே. மா.

142 கச்சினையுங் கிழித்துவட பொருப்பினையும் பழித்தகன
தனத்துக் கூர்த்த
நச்செரிவேல் பொருநெடுங்கண் மடமாதர் கருங்குழன்மே
னயந்து நாதக்
குச்சரிகின் டியமழலைக் களியளிகள் புனல்குடையக்
குழல்கா ணாத
விச்சையினுற் செழுங்கொன்றைக் கருங்காயைக் குழலெனச்சென்
றிருக்கு மாதோ. (கசஉ)

143 வரந்தருக தருகவெனக் கனைகழற்கான் மைந்தருடன்
வசைதீ ரன்பு
புரந்தருண்மங் கையர்புனலாழ்ந் தெழுதருமக் காலையினிற்
பொறிவண் டார்ப்பச்
சிரந்தனிலம் புயமலர்தை வருதிறம்வாழ்ந் தருள்கவெனத்
தெளிநீர் வாவி
கரந்தனைவைத் தாசிபகர்ந் தருள்வதெனு முதுமொழியே
காட்டு மன்னே. (கசங)

144 தழைமுத்த நகையார்கள் புனன்மூழ்கி யெழுபொழுதிற்
றடந்தோய் சங்கின்
விழைமுத்தங் கருங்குழன்மேற் றிரைகொழிப்ப மழைமுத்தாய்
மென்றோள் வீழக்
கழைமுத்தாய்க் கனதனத்தின் மிசைவீழ்தன் மழகளிற்றுக்
கவட்டுக் கொம்ப
ரிழைமுத்தாய்ப் பேதித்துக் காண்குனர்கண் ணிணைபடுக்கு
மியற்கைத் தொன்றே. (கசச)

145 தடங்குடைவார் தனித்தொடிக்கை தாங்கிநிமிர் கடைகுழன்று
தாழ்மென் கோதை
படர்ந்திரைக்குந் திரைகொழித்த முத்தொடுநீர்த் துளிமயங்கிப்
பனிற்றுக் காலைக்
குடம்புரைபூண் முலைமுகட்டிற் பதிந்திழிய வெண்ணிலவைக்
கொழிக்கு முத்த
வடம்பரிந்த தெனத்தெருண்ட மனமருண்டோர் கரத்தவற்றை
வருடு வாரே. (கசரு)

146 மாடையும்பொன் மணிநுயின்ற வருங்கலனு மிளங்கதிர்போல்
வயங்குஞ் செம்பொன்
னுடையுந்தண் டுறைபடிந்தா தலர்க்கருள்வார் கவிழ்த்தகல
னமைந்த வாற்றூற்
பேடையுஞ்சே வலுமெனவோ திமமாசு வீற்றிருக்கப்
பெறுநன் போதி
னோடையும்பல் கலன்படிவார்க் கருள்வதற்குப் படைத்ததென
வுரைப்ப தாமே. (கஙசு)

147 சிவிகையுமா டகப்பசும்பொற் றண்டிகையும் வெண்ணிலவிற்
றிகழு முத்தின்
கவிகையும்புட் பகவிமா னமுநொடியுட் கறங்கெனவா
காய சாரி
பவிபுகழைக் கதிபயில்வாம் பரிநிரையுங் கரிநிரையும்
புயலூ டாடிக்
குவிதருவெண் டுகிற்கொடித்திண் டேர்நிரையு மெவ்வுழியுங்
குழீஇய தொன்றே. (கஙஎ)

148 தருக்குழாங் தழைத்தோங்கு பொன்னுலகத் தரம்பையருந்
தாணி மேவு
மருக்குழாஞ் செறிந்திருண்ட குழற்கற்றைக் கருங்கயற்கண்
மாத ராருந்
திருக்குழா மெனத்தழங்கு புனலாட்டுள் விரவினராய்ச்
சிறப்பி னேக
வுருக்கொளா விண்ணவர்தம் மரம்பையரைப் பகுத்தறியா
தழல்வா ரன்றே. (கஙஅ)

149 நான்றபுழைத் தடக்கைமதம் பொழிகவுட்கிம் புரிக்கோட்டு
நால்வாய் வேழத்
தான்றதவி சடைப்பிடர்நின் றிழிந்துபுகப் புனலாடு
மாச ராலும்
வான்றவழுங் கூன்குழவிப் பிறையெனவே யிலகுறுதன்
மாத ராலுந்
தோன்றுபொழு தினிலபிரா பதப்பிடரிற் குலிசநதி
தோற்ற தன்றே. (கஙகூ)

150 கழுகுவார் சிறைப்பந்தர்ப் பருந்துநிணஞ் சுவைத்தெழுவேற்
காளை மார்மென்
புழுகுவார்ந் திழுகுழலைப் பூவைமா ருடன்றிளைத்துப்
பூச லோடு
முழுகுவார் மெய்முழுகப் பொதிசாந்தங் கரைத்தேவெம்
முழவி னீண்டி
யொழுகுவார் புனல்படுகர்க் கடற்புலான் முழுதினையு
மொழித்த தன்றே. (௧௫௦)

151 மழையேயுங் குழன்மாதர் முகமேது வனசமல
ரேது வார்ந்த
குழையேதிங் கசைவள்ளைக் கொடியேது கண்ணேது
குவளை யேது
கழையேது தோளேது கமுகேது கழுத்தேதென்
றுணராக் காட்சிப்
பிழையேது மில்லாத வாவிவளம் யானுரைக்கும்
பெற்றி நன்றே. (௧௫௧)

வேறு.

152 வணங்கி மங்கையர் படிதலி னிடுகர வளையேற்குங்
கணங்கொள் வெண்டிரை யெதிரெறி வளையவர் கரமேற்ப
திணங்க லாற்றடு மாறிய தொழிற்பெய ரிஃதாமென்
றுணர்ந்து சங்கணித் துறையெனும் பெயரதற் குரித்தாமே. ()

153 வலம்பு ரித்திர ளவற்றினுக் கரசனும் வகைசானுஞ்
சலஞ்ச லத்திரள் புனிதமு வுடம்புறு தகைத்தாக
வுலந்த நாளினு மூனுள நாளினு மொலிகாட்டு
நலம்பு ரந்ததா லெளியதோ வதன்புகழ் நவில்வார்க்கே. (௧௫௩)

முதலாவது: நாடுவாழ்த்துச்சருக்கம் முற்றும்.